பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 13 திங்கட்கிழமை (27.06.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :213

## இன்னும் 4 மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல்?

கொழும்பு,ஜூன்27

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இன்னும் நான்கு மாதங்களில் - அதாவது அடுத்த ஒக்ரோபர் 21ஆம் திகதிக்கும் - நவம்பர் 21ஆம் திகதிக்கும் - இடையில் நடத்தப்பட்டேயாகும்.

- இவ்வாறு விடயமறிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் 1999 டிசெம்பர் 21ஆம் திகதி நடைபெற்றது. அத்தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெற்றிபெற்றார் என அடுத்த நாள் (1999 டிசெம்பர், 22ஆம் திகதி) தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க உத்தியோகபூர்வமாக அறிவித்தார். அந்தத் திகதியிலிருந்தே அவரின் இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பிக்கப்பட்டதாக இப்போது முடிவுசெய்யப்பட்டிருக்கின்றது எனச் செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

1999 டிசெம்பர் 22ஆம் திகதி தேர்தல் வெற்றியை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதம நீதியரசர் சரத் என். சில்வா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தார். அதைத் தொடர்ந்து அவரது புதிய அமைச்சரவையும் ஜனாதிபதியின் முன்னால் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டது.

தவிரவும், 2000ஆம் ஆண்டு ஒகஸ்டில் ஜனாதிபதி குமாரதுங்க, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வழிசெய்யும் அதிகாரப் பரவலாக்கல் என்ற பெயரில் ஒரு புதிய அரசமைப்புக்கான நகலை நாடாளுமன்றத்தில் தாமே சமர்ப்பித்தார். அது நாடாளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும், ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்காலம் குறித்து அவர் நாடாளு (2ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்புக்கு எதிராக இன்று ஜே.வி.பி. வழக்குத் தாக்கல்!

## இந்தியாவையும் கூட ஜனாதிபதி சந்திரிகா மோசம் செய்துவிட்டார் எனவும் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன்27

**இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்டுள்ள பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி. இன்று வழக்குத் தாக்கல் செய்கிறது. அக்கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க இதனை நேற்று அறிவித்தார்.**

**பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டைச் செய்துகொண்டதன் மூலம் ஜனாதிபதி சந்திரிகா தனது நாட்டை மட்டும் காட்டிக்கொடுக்கவில்லை இந்தியாவையும்கூட மோசம் செய்துவிட்டார் என ஜே.வி.பி. குற்றஞ்சுமத்தியிருக்கின்றது.**

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவும், அக்கட்சியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ஸவும் கொழும்பில் நேற்று செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர். அதிலேயே ஜே.வி.பியின் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

செய்தியாளர் மாநாட்டில் அவர்கள் மேலும் கூறியதாவது:-

"இந்த ஒப்பந்தத்தின் மூலம் திருகோணமலை உட்பட வடக்கு - கிழக்கில் உள்ள துறைமுகங்கள், இறங்குதுறைகள், ஜெட்டிகள் போன்றவற்றை மீளமைக்க மட்டுமல்லாமல் கடலோரத்தைத் துப்புரவு செய்தல் என்ற பெயரில் கரையோரக் கடலுக்குள் சட்டரீதியாக இறங்கித் தங்கள் வேலைகளைச் செய்யவும் கடற்புலிகளுக்கு அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது.

"நோர்வே அனுசரணையாளர்களைச் சந்தித்த பின்னர் கருத்து வெளியிட்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்தப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக இந்தியாவின் கவலையை வெளியிட்டுள்ளதுடன், அது தனிநாட்டுக்கு வழி (12ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவடைந்த போராளிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்27

கடந்தகாலங்களில் பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் வீரச்சாவடைந்த 6 போராளிகளின் பெயர் விவரங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர். 07.07.1992 அன்று கல்வரப்பு என்னும் இடத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்ட தாக்குதலின்போது தமிழ்த் தேசிய துணைப்படைவீரர் மதிவதனன் (புண்ணியம் பாலசிங்கம் - பூமரத்தடிச் சேனை, ஈச்சிலம்பற்று) என்னும் போராளியும் -

18.04.2003 அன்று மூதூர் இராணுவம் மற்றும் முஸ்லிம் காடையர் நடத்திய தாக்குதலின்போது தமிழ்த் தேசிய துணைப்படைவீரர் கமலதாசன் (தர்மலிங்கம் கமலதாசன் (ரஞ்சன்), கடற்கரை சேனை, மூதூர்) என்னும் போராளியும் -

28.09.2002 அன்று நடைபெற்ற எதிர்பாராத வெடி விபத்தின்போது தமிழ்த் தேசிய துணைப் (12ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் நேற்று பொதுமக்களுடன் படையினர் முறுகல்!

யாழ்ப்பாணம்,ஜூன்27

காரைநகரில் நேற்று இடம்பெற்ற முன்பள்ளி விளையாட்டு விழாவில் புலிக்கொடி ஏற்றுவது தொடர்பாக கடற்படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலை உருவானதாகவும் -

இது குறித்து தாங்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிட்டுள்ளனர் என்றும் - விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட (12ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவத்தினரின் பாதுகாப்புடன்

## போராளிகள் 50 பேர் பயணித்த பஸ் மீது வெலிகந்தையில் கிளைமோர் தாக்குதல்!

### மயிரிழையில் தப்பியது; போராளி காயம்!

அம்பாறை,ஜூன்27

புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் மற்றும் அவரது அரசியல்துறைப் போராளிகள் சுமார் ஐம்பது பேரை ஏற்றிக்கொண்டு இராணுவத்தினரின் காவலோடு சென்ற வாகனத் தொடரணி மீது நேற்றுப் பிற்பகல் 2.55 மணியளவில் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

வெலிகந்தை ஸ்ரீலங்கா இராணுவ முகாமிலிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள போத்தை என்ற பகுதியில் - இரண்டு இராணுவ நிலைகளுக்கு நடுவில் - இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கிளைமோரின் நேரடித் தாக்குதலிலிருந்து மயிரிழையில் போராளிகள் பயணம் செய்த பஸ் தப்பியதால் பெரும் உயிரிழப்பு, அழிவுகள் தவிர்க்கப்பட்டன. ஒரேயொரு போராளி காயமடைந்தார் எனத் தெரியவந்தது.

போக்குவரத்து வசதி செய்யப்படாததால் கிளி (12ஆம் பக்கம் பார்க்க)

### முஸ்லிம்கள் ஒதுக்கப்பட்டனராம்!

## விமானசேவை நிறுவனத்தலைவர் பதவியைத் துறந்தார் ஹிஸ்புல்லா!

கொழும்பு,ஜூன்27

அரசும், புலிகளும் கைச்சாத்திட்டுள்ள பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டில் முஸ்லிம்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள் எனத் தெரிவித்து அதற்கு ஆட்சேபமும், எதிர்ப்பும் தெரிவிக்கும் வகையில் தேசிய ஐக்கிய முன்னணியின் (நுஆ)வின் சிரேஷ்ட பிரதித் தலைவர் எம்.எல்.எவ்.ஹிஸ்புல்லா, அரசு தனக்கு வழங்கிய தேசிய விமானசேவைகள் மற்றும் விமான நிலைய நிறுவனத் தலைவர் பதவியை நேற்றுத்துறந்தார்.

அதேவேளை, இதேவிடயத்துக்காகத் தேசிய ஐக்கிய முன்னணித் தலைவி பேரியல் அஷ்ரப் தனது அமைச்சர் பதவியை அடுத்த 48 மணி (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசிலிருந்து வெளியேறுவதா? நீடிப்பதா? இரண்டும் கெட்டான் நிலையில் நுஆ

கொழும்பு,ஜூன்27

அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ) தொடர்ந்தும் அரசுக்கு ஆதரவை வழங்குவதா, இல்லை அரசிலிருந்து விலகிவிடுவதா என்பதைத் தீர்மானிக்க முடியாமல் இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப் கடந்த வெள்ளிக்கிழமையே தனது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்யும் கடிதத்தில் கையெழுத்திட்டுவிட்டார் எனக் கூறப் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களுக்கு வடமராட்சியில் நேற்று அஞ்சலி நிகழ்வுகள்

கரவெட்டி,ஜூன்27




ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து ஆறுமாதங்கள் பூர்த்தியடைந்ததை ஒட்டி நேற்று வடமராட்சியில் உயிரிழந்த மக்களுக்கு பரவலாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

உயிரிழந்தவர்களின் உடல்கள் ஒன்றாகப் புதைக்கப்பட்ட இடங்களில் ஒன்றுகூடிய உறவினர்கள் அவ்விடங்களில் தீபங்களை ஏற்றியும் மலர்களைத் தூவியும் அஞ்சலி செலுத்தினர். சிலர் புதைகுழிகள் மீது அழுது புரண்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

மணற்காட்டில் 71 சடலங்கள் ஒன்றாகப் புதைக்கப்பட்ட இடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. (12ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மட்டு.-அம்பாறையை தனித்தனியே பிரித்து நிர்வகிக்க புலிகள் முடிவு!

அம்பாறை,ஜூன்27

விடுதலைப் புலிகள் அம்பாறை மாவட்டத்தை தனிநிர்வாக அலகாகப் பிரித்துள்ளனர். இதுவரை காலமும் மட்டு. - அம்பாறை என இணைந்த நிர்வாக அலகாக நிர்வகிக்கப்பட்ட பிரதேசம், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை என்று தனித்தனியே இரு நிர்வாக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தின் அபிவிருத்தி துரித வளர்ச்சியடைய வசதியாகவே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இதனை நடைமுறைப்படுத்தினார் என்றும்-

இதன்படி இருமாவட்டங்களுக்கும் தளபதிகள், பொறுப்பாளர்கள், நிர்வாகப் பொறுப்பாளர்கள் ஆகியோரை அவர் நியமித்துள்ளார் என்றும் - கூறப்பட்டது.

அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதியாக கேணல் ராம், மட்டக்களப்பு மாவட்ட தளபதியாக லெப்.கேணல் நாகேஸ், துணைத் தளபதியாக லெப்.கேணல் ரமணன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தலைவர் பிரபாகரன் கையொப்பமிட்ட நியமனக் கடிதங்களை இவர்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# இன்னும் 4 மாதங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தில் முன்வைத்த அந்த நகலும் திட்டவட்டமாகப் பிரஸ்தாபித் திருந்தது.

அந்த உத்தேச அரசமைப்பு மூலம் நிறைவேற்று அதிகாரப் பிரதமர் தலைமையிலான - நாடாளுமன்றுக்குப் பதில் கூறக்கூடிய பிரதமர் தலைமையிலான - அரசுமுறை ஒன்றை ஜனாதிபதி குமாரதுங்க முன்வைத்திருந்தார்.

அப்படி ஒரு பிரதமர் ஆட்சிமுறை நடைமுறைக்கு வந்தாலும் 1999 டிசெம்பர் 22ஆம் திகதி ஆரம்பமான ஜனாதிபதி குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலம் 2005 டிசெம்பர் 22ஆம் திகதியில் அது ஆறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும்வரை அவரது நிறைவேற்று அதிகாரப் பதவி தொடரும் என்று அந்த அரசமைப்பு நகலில் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதாவது, அவரது இரண்டாவது பதவிக் காலம் எப்போது முதல் எப்போது வரை என்பதை அவர் சமர்ப்பித்த உத்தேச அரசமைப்பு நகலே தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தியிருந்தது எனக் கூறப்படுகின்றது.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்போது 'புதுக்கதை' விடுகின்றார்.

1994 நவம்பரில் தமது முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற தாம் அதன் பின்னர் இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலைச் சுமார் ஓராண்டு முன்கூட்டியே 1999 டிசெம்பரில நடத்தி அதில் வெற்றிபெற்றபோதிலும்கூட, 2000 நவம்பர் வரையும் முதலாவது பதவிக்காலத்தையே தொடர்ந்தார் என்றும் -

1999 டிசெம்பரில் இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வெற்றிக்கான பதவிக் காலத்தை 2000 நவம்பரில் இருந்துதான் தாம் ஆரம்பித்தார் என்றும் -

அதற்கான விசேட பதவியேற்பு பிரதம நீதியரசருக்கு முன்னால் 2000 நவம்பரில் நடைபெற்றது என்றும் -

அதனடிப்படையில் தமது இரண்டாவது பதவிக்காலம் 2006 நவம்பரில் முடிவடைவதால் அப்போதுதான் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் என்றும் -

ஜனாதிபதி சந்திரிகா பகிரங்கமாகவே கூறி வருகின்றார்.

இது சம்பந்தமாக ஜனாதிபதி என்ன கூறினாலும் ஜனாதிபதி குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலம் எப்போது முடிவடைகிறது எனக் கணித்து, அதனடிப்படையில் அடுத்த தேர்தலுக்கு அழைப்பு விடுப்பதற்கான முழு அதிகாரமும் அரசமைப்புப்படி தேர்தல் ஆணையாளருக்கே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், 1999 டிசெம்பர் 22ஆம் திகதி ஜனாதிபதி குமாரதுங்க, தமது இரண்டாவது தேர்தல வெற்றியை அடுத்துப் பிரதம நீதியரசர் முன்னால் செய்துகொண்ட சத்தியப்பிரமாணம் -

அவரே நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அரசமைப்பு நகல் சட்டத்தில் தமது பதவிக்காலம் குறித்து விவரித்துள்ள ஒப்புதல் தகவல் -

2000 நவம்பரில் இரகசியமாக நடந்ததாகக் கூறப்படும் ஜனாதிபதி சந்திரிகாவின் அடுத்த பதவியேற்றல் பற்றிய உத்தியோகபூர்வ தகவல ஏதும் தேர்தல் ஆணையாளருக்கோ, நாட்டுக்கோ அந்தக் காலத்தில் வெளியிடப்படாமை -

போன்ற அம்சங்களைக் கருத்தில் எடுத்து, அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்பதைத் தேர்தல் ஆணையாளர் தீமானித்துவிட்டார் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அதன்படி -

1999 டிசெம்பர் 22ஆம் திகதியில் அவரது இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல் வெற்றிபற்றிய அறிவிப்போடு அவர் செய்த சத்தியப்பிரமாணத்துடன் அந்த இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பிக்கிறது எனத் தேர்தல் ஆணையாளர் தீர்மானிப்பாராயின், அந்தப் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளில் - 2005 டிசெம்பர் 22ஆம் திகதியுடன் - பூர்த்தியாகிறது.

அத்திகதிக்கு முன்னர், இரண்டு மாதத்துக்கு மேற்படாமலும் ஒரு மாதத்துக்குக் குறையாமலும் உள்ள ஒரு காலப்பகுதியில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை தேர்தல் ஆணையாளர் நடத்த வேண்டும்.

இதன்படி எதிர்வரும் ஒக்டோபர் 21ஆம் திகதிக்கும் - நவம்பர் 21ஆம் திகதிக்கும் இடையில இத்தேர்தல் நடைபெறும் எனத் தற்போது தெரிவிக்கப்படுகின்றது. (க)

# புதுவையின் கவிதைத் தொகுப்பு: நாளை வவுனியாவில் அறிமுகவிழா

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்' கவிதைத் தொகுதி அறிமுகவிழா நாளை 28.06.2005 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு வவுனியா முத்தையா மண்டபத்தில் தேசிய எழுச்சிப் பேரவையின் வவுனியாக் கிளையினரின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு.சு.ஞானம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் தேசியக் கொடியை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி அலையும், பொதுச்சுடரை திரு.ஞானப்பிரகாசமும் ஏற்றிவைக்கின்றனர். விழாச் சுடரை திரு.கு. சிதம்பரநாதனும், திரு.ம.ச.பத்மநாதனும் ஏற்றிவைக்க தமிழ் .வாழ்த்தை இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவிகள் பாடுகின்றனர். செல்வி ஜெசாந்தி வரவேற்புரையையும், வாழ்த்துரைகளை பிரம்மஸ்ரீ கந்தசாமிக்குருக்கள், வண.பிதா ஜெரோம் லெம்பேட், நகரப் பள்ளிவாசல் மௌலவி ஆகியோரும் வழங்குகின்றனர். சிறப்புரையை பேராசிரியர் என்.நந்த குமார் ஆற்ற வெளியீட்டுரையை கவிஞர் கனகரவி நிகழ்த்துகின்றார். வவுனியா மாவட்ட அரச அதிபர் திரு.சி.சண்முகம் முதற்பிரதியை வழங்க சமூக சேவையாளர் திரு.கே.செந்தில்நாதன் பெற்றுக்கொள்வார். சிறப்புப்பிரதி வழங்கலைத் தொடர்ந்து நூலின் மதிப்பீட்டுரைகளை ஜனாப் திக்வெல்லைக் கமால், தமிழருவி சிவகுமாரன், முல்லைமணி வே.சுப்பிரமணியம் ஆகியோர் நிகழ்த்த ஏற்புரையை நூலாசிரியர் கவிஞர் புதுவை இரத்தினதுரையும் நன்றியுரையை திரு. எஸ்.என்.ஜி.நாதனும் ஆற்றுகின்றனர்.

## சுத்தமான சுற்றாடலைக் கொண்டுள்ளது:

# வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு யாழ்.சுகாதாரப் பணிப்பாளர் பாராட்டு

வடமராட்சி,ஜூன்27

யாழ்.மாவட்டத்தில் சுகாதாரம் பேணி சுற்றாடலை மிகச் சுத்தமாக வைத்திருக்கும் வைத்தியசாலையாக வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை விளங்குகிறது என யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் பாராட்டுத்தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய சுகாதாரப் பணிப்பாளர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டவரான வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி க.மயிலேறும் பெருமாஷிடம் நேரடியாகவே இப்பாராட்டைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வைத்தியசாலையின் சுத்தமான சூழலே நோயாளர்களின் நோய்களைக் குறைத்து விடும். வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையானது யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் மிகச்சுத்தமாகப் பேணப்பட்டு மிகச்சிறப்பாக இயங்கி வருகிறது.

எனவே, இவ்வாறு ஏனைய வைத்தியசாலைகளும் சுத்தமாகப் பேணப்படுவதற்கு வைத்தியசாலை ஊழியர்களும் பொதுமக்களும் கடுமையாக உழைக்கவேண்டும் எனக் குறிப்பிட்டார். (ஒ-173)

# கொலம்பியாவில் 25 படையினர் பலி!

லண்டன்,ஜூன்27

கொலம்பியாவில் புடுமாயோ மாகாணத்தில் இகுவடோர் நாட்டு எல்லையில் படையினர் மீது மாவோ தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் பதுங்கியிருந்து நடத்திய திடீர் தாக்குதலில் 25 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 19 பேரைக் காணவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் ஆதரவைப் பெற்ற அந்நாட்டு ஜனாதிபதி மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடாது எனக்கூறி மாவோ தீவிரவாதிகள் தீவிர வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர். அதன் ஒரு அங்கமாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் மாவோ தீவிரவாதிகள் நடத்திவரும் தாக்குதல்களில் சுமார் 120 படையினர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மோசடிப் பிரசாரத்தில் ஈடுபட்டாராம்: ஈரான் தேர்தலில் வென்ற ஜனாதிபதி

## எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் அதிபர் முறைப்பாடு

ஈரானில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற கடும் பழைமைவாதியும், தெஹ்ரான் நகர ஆளுநருமான மஹ்மூத் அஹ்மதினஜாத் சட்டத்துக்கு புறம்பான மோசடிகள் நிறைந்த தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார் என்று அவரை எதிர்த்து போட்டியிட்டு தோல்வியைத் தழுவிய முன்னாள் அக்பர் ஹஷ்மி ரவ்ஸான்ஜனி குற்றஞ்சாட்டியுள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் அக்பர் நேற்று வெளியிட்ட பொதுஅறிவிப்பு ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

1989 - 1997 வரையான காலப்பகுதியில் ஈரானில் ஜனாதிபதியாகப் பதவியேற்றிருந்த ரவ்ஸான்ஜனி தனது அறிவிப்பில் தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இப்போது அரச அதிகாரம் பழைமைவாதிகளின் கைகளில் உள்ளது. அரசின் சகல வளங்களும் தேர்தலில் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

என்னையும், என் குடும்ப அங்கத்தவர்களையும் அவமானப்படுத்துவதற்காக பலகோடி அமெரிக்க டொலர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த முடிவுகள் சம்பந்தமாக நான் எந்த நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை. ஏனெனில் ஈரானின் நீதித்துறையினால் எதையுமே செய்யமுடியாது என்பதை எடுத்துக்காட்டியுள்ளது.

ஒரு போட்டியாளரை பலவீனப்படுத்தப்பட எண்ணியவர்கள் புரட்சியையே பலவீனப் படுத்துகின்றனர். இத்தகைய எதிரிகளிடமிருந்து நாடு விடுபடும் என நான் எதிர்பார்க்கிறேன்.

தற்போது ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவருக்கு எல்லோரும் உதவவேண்டும் இவ்வாறு அவரது அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பலம்வாய்ந்த இஸ்லாமிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதே தனது நோக்கம் என்றும்-

நாட்டின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை உள்நாட்டு எண்ணெய் நிறுவனங்களுக்கு எணெய் ஒப்பந்தங்களை வழங்கவே தான் விரும்புகிறார் என்று தேர்தலில் வெற்றி யீட்டிய புதிய ஜனாதிபதி அஸ்மதினஜாத் தெரிவித்துள்ளார்.

நடைபெற்ற தேர்தலில் 62 வீத வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ள அஸ்மதின ஜாத், ரவஸான்ஜனியை விட 2 மடங்கு வாக்குகளைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அவசரகால நிலையின் நினைவுதினம் அனுஷ்டிப்பு

லண்டன்,ஜூன்27

இந்தியாவில் 1975ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியினால் கொண்டுவரப்பட்ட அவசர கால நிலைமையின் 30ஆம் ஆண்டு நினைவினையொட்டி பிரதான எதிர்க்கட்சியான பா.ஜ. கட்சி நேற்றுமுன்தினத்தை கறுப்புத் தினமாக அனுஷ்டித்தது.

இந்தியாவின் முன்னாள் பிரதமரான இந்திராகாந்தியினால் கொண்டுவரப்பட்ட அவசர கால நிலைமையின் 30ஆம் ஆண்டு நிறைவே நினைவு கூரப்பட்டது.

அந்த அவசர காலநிலை காலகட்டத்தில் இந்தியாவில் இடம்பெற்ற அதிகார துஷ்பிரயோகங்களை எடுத்துக்காட்டும் வண்ணம் நாடு முழுவதும் பல நகரங்களில் பொதுக்கூட்டங்களையும் பேரணிகளையும் நடத்தியது பா.ஜ.க.

அந்த அவசரகாலச் சட்டம் நடைமுறையிலிருந்த சிறிய காலப் பகுதியில் அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் சிறையிலடைக்கப்பட்டனர்.

மீண்டுமோர் அவசர காலநிலை நாட்டில் உருவாகக்கூடாது என்பதை மக்களுக்கு நினைவூட்டுவதற்காகவே இன்றைய தினம் கறுப்புத் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது என அந்தக் காலப் பகுதியில் 19 மாதங்கள் சிறை வைக்கப்பட்டிருந்த தற்போதைய பா.ஜ.க. தலைவர் எல்.கே.அத்வானி தெரிவித்தார்.




# அமெ. படை ஈராக்கிலிருந்து தற்போதைக்கு வெளியேறாது

## புஷ் திட்டவட்ட அறிவிப்பு

வாஷிங்ரன்,ஜூன்27

"ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் இப்போதைக்கு வெளியேறாது" என்று ஜனாதிபதி புஷ் திட்டவட்டமாக அறிவித்தார்.

தற்போது அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஈராக் ஜனாதிபதி இப்ராஹிம் அல் ஜபாரியுடன் பேச்சுகள் நடத்திய பின்னர் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

புஷ் தொடர்ந்தும் கூறியதாவது:-

ஈராக்கியர்கள் தங்களைத் தாங்களே பாதுகாக்கும் அளவுக்கு போதுமான பயிற்சி பெறும் வரை, அமெரிக்கப் படைகள் ஈராக்கில் தங்கியிருக்கும். இதை ஈராக் பிரதமரிடம் நான் தெரிவித்துவிட்டேன்.

ஒரு முக்கியமான குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக நமது படைகளை அங்கு அனுப்பிவைத்திருக்கிறோம். நமது படைகள் வெளியேறுவது பற்றி கால அட்டவணையை நாம் வெளியிட்டால் எதிரிகளின் கோரிக்கைக்கு நாம் இணங்கிவிட்டோம் என்றதாகிவிடும்.

ஈராக்கின் அரசியல் அட்டவணை தயாரிப்பில்தான் இப்போது நான் கவனம் செலுத்தி வருகிறேன். எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்குள் ஈராக்கில் புதிய அரசியல் சட்டம் உருவாக்கப்படவேண்டும். ஒக்டோபர் மாதத்தில் அதன்மீது பொதுவாக்கெடுப்பு நடத்தி டிசெம்பரில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதே எனது அட்டவணையாகும்.

- இவ்வாறு கூறினார் அவர்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## முஸ்லிம்கள் விடயத்தில் ஐ.தே.க. படு சந்தர்ப்பவாத அரசியல்!

தமிழர் தரப்புக்கு மற்றப் பக்கத்தில் உள்ள தரப்புகள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒப்பந்தம் செய்தால் அவற்றுக்கு ராசி இல்லாமல் போய்விடுமோ என்னமோ...!

2002 சித்திரைப் புதுவருட காலத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் ஓர் ஒப்பந்தம் செய்தது. அவ்வளவுதான். அன்று தொடங்கியது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்குள் குழப்பம். அந்தக் கட்சி துண்டுதுண்டுகளாக உடைந்து, சிம்பு சிம்பாகச் சிதறிப்போயிருக்கின்றது.

முஸ்லிம்களைச் சிதறடிப்பதற்காக விடுதலைப் புலிகள் வகுத்த திட்டம்தான் அந்த ஒப்பந்தம் என்றும் -

அந்த ஒப்பந்தம் மூலம் முஸ்லிம்களின் ஒற்றுமை வலுவைப் புலிகள் சிதறடித்துவிட்டனர் என்றும் -

தென்னிலங்கையில் விமர்சித்தவர்கள் இல்லாமல் இல்லை.

2002 முற்பகுதியில் விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, அதனடிப்படையில் சமாதானப் பேச்சுகளை ஆரம்பித்த ரணிலின் அரசு, அதை ஒட்டி இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் முயற்சிகளைத் தொடரவிருந்த வேளையில் வீட்டுக்கு அனுப்பப்பட்டது. புலிகளுடன் இணங்கிப்போக முயன்றதற்குக் கிடைத்த பரிசு அது.

இப்போது சர்வதேச அழுத்தம் காரணமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வேறுவழியின்றி புலிகளுடன் பொதுக் கட்டமைப்பு உடன்பாட்டுக்கு வரமுயன்றார். அவ்வளவுதான் உடன்பாட்டுக்கு வரமுன்னரே ஆளுங்கூட்டமைப்பு உடைந்துவிட்டது. ஒப்பந்தத்தின் பின்னர் எஞ்சியிருக்கும் சிறுபான்மை அரசிலிருந்தும் செத்த நாயிலிருந்து ஒட்டுண்ணி கழருவது போல், தாக்குப்பிடிக்க முடியாத இந்த அரசிலிருந்து மேலும் சில கட்சிகள் கழன்றுவிடத் திட்டமிட்டிருக்கின்றன என்ற தகவல் வெளியாகியிருக்கின்றது.

இந்தக் குளறுபடிகள், பிரச்சினைகளுக்கு மத்தியில் குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பது போல இவ்விடயத்தில் அரசியல் ஆதாயம் தேட - இன்னும் குட்டையைக் குழப்ப - பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி முயல்வது விசனத்துக்குரியது. பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை விமர்சித்து, அக்கட்சியின் நிலைப்பாடு எனத் தெரிவித்து அக்கட்சியின் உத்தியோகபூர்வப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வெளியிட்ட ஆறுபக்க அறிக்கை ஐ.தே.கட்சி முதலைக் கண்ணீர் வடிப்பதை அப்பட்டமாகத் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் சலசலப்பைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் நோக்கில் ஐ.தே.கட்சி நீலிக்கண்ணீர் விடுகிறது.

*"வடக்கு - கிழக்கில் உள்ள முஸ்லிம்களின் பிரதிநிதித்துவப் பங்களிப்பின்றியே இந்த உடன்பாட்டில் அரசு ஒப்பமிட்டிருப்பது துரதிர்ஷ்ட வசமானது. இந்த விடயத்தில் முஸ்லிம்களின் கலந்தாலோசனை பெறப்படாமை குறித்து குறிப்பிடத்தக்களவு முறைப்பாடுகள் எழுந்துள்ளன. முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாகக் கவலை ஏற்படுத்தத்தக்க இடைவெளி உள்ளது"* என்று கவலைப்படுகின்றது ஐ.தே.கட்சி.

ஏதோ தாங்கள் விடுதலைப் புலிகளோடு நடத்திய சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களை மூன்றாம் தரப்பாகச் சேர்த்துக்கொண்டவர்கள் போலவும் இப்போது ஜனாதிபதி குமாரதுங்க அதைக் கோட்டைவிட்டவர் போலும் காதில் பூச்சுற்ற முயல்கிறது பேராசிரியர் பீரிஸின் அறிக்கை.

முஸ்லிம்களைத் தம்பக்கம் இழுப்பதற்காக - 'இரண்டும் கெட்டான் நிலையில்' தத்தளித்துக்கொண்டிருக்கும் முஸ்லிம் தலைவர்களைத் தமது பக்கம் வலையில் விழுத்துவதற்காக - இப்படிக் கவலைப்படுகிறது ஐ.தே.கட்சி.

ஆனால், பொதுக்கட்டமைப்பு விடயத்தை நாசூக்காகப் பயன்படுத்தித் தான் நடந்துகொள்ளும் இந்தப்போக்கின் மூலம், சிறுபான்மை இனங்களான - தமிழ்பேசும் இனப்பிரிவுக்குள் உள்ளடங்குகின்ற - தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் இத்தகைய அறிக்கைகள் மூலம் கருத்து முரண்பாட்டையும், வேறுபாட்டையும், அதன்மூலம் குரோதத்தையும் தூண்டி வளர்ப்பதற்குத் தான் துணைபோகின்றது என்பதை ஐ.தே.கட்சி மறந்துவிடக்கூடாது.

இந்தப் பொதுக்கட்டமைப்பு, ஆழிப்பேரலையால் ஏற்பட்ட அனர்த்தத்துக்கான நிவாரணப் பணிகளை முன்னெடுக்கும் ஒரு வெறும் நிர்வாக முறைமை பற்றிய ஓர் ஏற்பாடு மட்டுமே. இரண்டு பிரதேசங்களைத் தனித்தனியாகக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இரண்டு படைகளின் தலைமைகள் தமக்குள் பேசி, நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கும் நிர்வாக ஏற்பாடு தொடர்பான ஒழுங்குமுறைக்கு இணக்கம் கண்டன. அதனால், அவை இரண்டும் அதில் ஒப்பமிட்டன.

இது, இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரம் அல்ல. அல்லது அந்தத் தீர்வுக்கு முந்திய இடைக்கால ஏற்பாடும் கூட அல்ல.

ஆனால், இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் கூட தான் புலிகளோடு நடத்திய ஐந்து சுற்று சமாதானப் பேச்சுக்களிலும் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்புப் பெற்றுத்தரவில்லை ஐ.தே. கட்சி.

ஆக, முஸ்லிம்களின் தலைமை ஒன்றுமைப்பட்டிருந்த காலத்தில் அவர்களே இதுதொடர்பாக நேரடியாகப் புலிகளோடு பேசி இணக்கம் கண்டிருந்தார்களே தவிர, ஆட்சியில் இருந்துகொண்டு புலிகளோடு பேச்சு நடத்திக்கொண்டிருந்த ஐ.தே.கட்சி அதை ஏற்படுத்திக்கொடுக்கவில்லை.

அந்தப் பேச்சுக்களில் வேண்டுமானால் ஐ.தே.கட்சி முஸ்லிம்களுக்கு மூன்றாம் தரப்பு குறித்து ஒப்புக்கு வலியுறுத்தியிருக்கலாம். அல்லது புலிகள் பங்குபற்றாத டோக்கியோ மாநாட்டில் - புலிகள் இல்லாததைப் பயன்படுத்தி முஸ்லிம்களுக்கு மூன்றாந் தரப்பு தேவை என்ற விடயத்தை அந்த அறிக்கைக்குள் முஸ்லிம் தரப்பினர் சேர்க்கப்பண்ணுவதற்கு விட்டுப்பிடித்திருக்கலாம்.

ஆனால், அமைதிப் பேச்சுக்களின் போது - சமாதான முயற்சிகளின்போது - உரிய காலம் வரும்போது மூன்றாம் தரப்பாக முஸ்லிம்களும் அதற்குள் சேர்க்கப்படுவார்கள் என்ற யதார்த்த நிலைமையைப் புரிந்துகொண்டு, அதற்கு இணங்கித்தான், அதைத்தான் அந்தப் பேச்சுக்களை புலிகள் இடைநிறுத்தி விலகும்வரை பேராசிரியர் பீரிஸ் பங்குபற்றிய ஐ.தே.கட்சி அரசு முன்னெடுத்துச் சென்றது.

தான் முன்னெடுத்த அமைதிப் பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு மூன்றாம் தரப்பை உறுதிப்படுத்த முடியாத கையாலாகாத்தனத்தில் இருந்த ஐ.தே.கட்சி, இப்போது அமைதி முயற்சிகளின் பாகமாக அல்லாத ஒரு விடயத்தில் முஸ்லிம்களுக்கு மூன்றாம் தரப்பு - அல்லது உரிய பிரதிநிதித்துவம் - வழங்கப்படவில்லை என்று கண்ணீர் வடிப்பது அரசியல் சந்தர்ப்பவாதப் போக்கேயன்றி வேறில்லை.

# பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டதை வரவேற்கிறார் ஐ.நா. செயலர் கோபி அனான்



பொதுக்கட்டமைப்பில் ஸ்ரீலங்கா அரசும் - தமிழீழ விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்டிருப்பதை ஐநா. செயலாளர் நாயகம் கோபி அனான் வரவேற்றுள்ளார்.

எண்ணிப்பார்க்க முடியாத துயரத்திலிருந்து இலங்கை மீட்சி பெறுவதற்கு இந்த ஒப்பந்தம் துணைபுரியுமென எதிர்பார்ப்பதாகவும் -

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட தினம் முக்கியமான தினமாக அமையுமெனத் தாம் நம்புவதாகவும் -

நிதி,நிர்வாகக் குழுக்களில் முஸ்லிம் சமூகம் உள்ளடக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்றும்-

ஐ.நாவின் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான கோபி அனானின் அறிக்கையை அவரின் பேச்சாளர் கடந்த வெள்ளிக்கிழமை நியூயோர்க்கில் வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

ஸ்ரீலங்காவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் நிவாரண நிதியுதவியை வழங்குவதற்கு இடமளிக்குமீ பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் ஸ்ரீலங்கா அரசும் - விடுதலைப் புலிகளும் இன்று கைச்சாத்திட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்பச் சம்பந்தப்பட்ட தரப்பினர் ஒத்துழைத்துச் செயற்பட்டுள்ளனர். இதனால் பெற்றிருக்கும் வெற்றியின் மூலம் ஜனாதிபதி சந்திரிகா தனது தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் மக்களின் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து சரியான நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஒப்பிட்டுப்பார்க்க முடியாத பெரும் துன்பத்திலிருந்து இலங்கை மீட்சி பெறுவதற்கான பாதைக்கு இந்த உடன்படிக்கை உதவியுள்ளது - என்று அதில் உள்ளது. (எ-203)

# தீவகத்திலிருந்து படையினரை வெளியேறக் கோரி ஊர்காவற்றுறையில் இன்று கண்டனப் பேரணி

தீவுப் பகுதியை ஆக்கிரமித்துள்ள படையினரை வெளியேறக் கோரி இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஊர்காவற்றுறையில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது.

இந்தப் பேரணி ஊர்காவற்றுறை பாலக் காட்டுச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி ஊர்காவற்றுறை உதவி அரசஅதிபர் பணிமனை வரை சென்றடையும்.

இந்தக் கண்டனப் பேரணியில் அனைத்து மக்களையும் அணிதிரளுமாறு தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பகம் மற்றும் தீவக பொது அமைப்புகளின் ஒன்றியம் என்பன கேட்டுள்ளன.

இந்தப் பேரணி தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் -

★ ஆக்கிரமிப்புப் படைகளே எமது நிலத்தை விட்டு உடனடியாக வெளியேறுங்கள். இல்லையெனில், நாம் அனைவரும் ஒன்றிணைந்து வெளியேற்றுவோம்.

★ உண்பதற்கு ஒன்றுமில்லை. உழுவதற்கு வயலுமில்லை. எம் நிலமோ எமக்கு இல்லை. இருப்பதற்கு வீடு இல்லை. கடலுக்கு போகவில்லை. கடலுணவோ போதவில்லை. இந்நிலையில் நாம் வாழ இருந்த நிவாரணமும் இடைநிறுத்தம். எம்மை அழிக்க புதுவழியா? நிவாரணத்தை உடன் வழங்கு!

★ இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை உடனடியாக தமிழீழ மக்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளிடம் கையளி!

★ எம் இனத்திற்கு விடிவு இல்லையா? எம் தாயகத்தில் நாம் வாழமுடியாதா? எமது வீடு எமக்கு இல்லையா? மனிதநேயம் என்பது இறந்துவிட்டதா? புத்தரின் தர்மம் புதைந்துவிட்டதா? எம் பொறுமையை சோதிக்காதே!

- என்று குறிப்பிடப்பட்டுள்ளது.(எ-203)

# வடக்கு – கிழக்கு மாகாணக் கல்வித்தரம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது

## தேசிய கல்வி ஆராய்ச்சி மதிப்பீட்டு நிலையம் சுட்டிக்காட்டு

அச்சுவேலி,ஜூன்27

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கல்வித் தரம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாக தேசியகல்வி ஆராய்ச்சி மதிப்பீட்டு நிலையம் (NEREC) நடத்திய ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதுவிவகாரத்தில் அந்த அறிக்கையில் ஆழ்ந்த கலலையும் தெரிவிக்கப்பட்டது.

ஆரம்பக்கல்வி தொடர்பாக இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் நான்காம் வகுப்பு மாணவர்கள் மத்தியில் 2004ஆம் ஆண்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆய்வு அறிக்கையில் இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களிலும் வடமாகாணம் ஒன்பதாவது இடத்திலும், கிழக்கு மாகாணம் எட்டாவது இடத்திலும் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் உள்ள மாவட்ட வலய, கோட்ட மட்டத்தில் பாடசாலை மாணவர்களில் நான்காம் தர மாணவர் மத்தியில் தாய்மொழி, ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தையும், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தையும் 'கல்வி அவசர வலயங்களாக' பிரகடனம் செய்துள்ள இந்த அறிக்கை, இந்த மாவட்டங்களில் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சிபார்சு செய்துள்ளது.

அம்பாறை மாவட்டம், கிழக்கு மாகாணத்திலுள்ள ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது சிறந்ததாகவும், வடமாகாணத்தில் வவுனியா மாவட்டம் வட மாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது சிறந்ததாகவும் உள்ளது எனவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாணவர்களின் கல்வி நிலை குறைவடைந்த நிலையில் காணப்படுவதற்கு ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள் மற்றும் மாகாண அதிகாரிகள் இதற்குக் கட்டாயம் பதில் சொல்லியே ஆகவேண்டும் - என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

# தென்மராட்சியில் வயிற்றோட்டத்தினால் பீடிக்கப்படுவோர் எண்ணிக்கை உயர்வு

தென்மராட்சி,ஜூன்27

தென்மராட்சி பிரதேசத்தில் வயிற்றோட்டம் மற்றும் வாந்தி ஆகியவற்றினால் பீடிக்கப்படுவோர் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக சாவகச்சேரி ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறவருவோரில் இந்நோய்களினால் பீடிக்கப்பட்டோரில் பத்துக்கு மேற்பட்டோர் தினமும் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் -

இப்பிரதேசத்தில் இலையான் பெருக்கம் அதிகரித்துள்ளதால் இலையான் மொய்த்த உணவுகளைச் சாப்பிடுவோரே பெரும்பாலும் இந்த நோய்களினால் பாதிக்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது என்றும் - வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்பொழுது பலாப்பழம், மாம்பழம் ஆகியவற்றுக்கான 'சீஸன்' ஆரம்பித்துள்ளதால் விற்பனை செய்யப்படும் பழவகைகளைக் கொள்வனவு செய்யும்போது பாவனையாளர்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்27

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரசஅதிபர் பிரிவுக்கான மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்வர். (எ)


## உதயவாக்கு

உண்மை சொல்வதற்கு சாமர்த்தியம் வேண்டியதில்லை. பொய் சொல்வதற்கு கற்பனா சக்தியை உபயோகித்தால் மட்டுமே முடியும்.

- நாடோடி.

## நாளை

*ஆனி 14*
*செவ்வாய்க்கிழமை*
*28.06.2005*
*திதி : ஸப்தமி*
*முன்னிரவு: 06.26 வரை*
*நட்சத்திரம் : பூரட்டாதி*
*பிற்பகல் 12.25 வரை*
*சுபநேரம் : 10.25- 11.55*
*ராகுகாலம்: 02.55 - 04.25*
*(யாவும் பழைய நேரப்படி)*



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Honda (Benly) மோட்டார் சைக்கிள், Ericsson (KF 788) Hand Phone என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Sairam 101, Palaly Rd., Jaffna. (36980)

Love Birds மற்றும் பியூட்டி ஹோமர், ஜக்கோப்பியன், அவுல், ஜேர்மன் அவுல், றேஸிங் ஹோமர், இஜிப்ஷன், நண்ஸ், மொடினா, பிளக்பேதர், பான்ரெல், பௌட்டர், ஹோமர் போன்ற பல்வகையான புறாக்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.ரட்ணம், இல.01, மகாத்மா வீதி, நெல்லியடி. T.P.: 0777 - 779975, 021 - 226 3104. (36999)

## காணி விற்பனைக்கு

கோப்பாய், இராஜ வீதி றோட்டில் இருந்து 100 யார் தூரத்தில் பள்ளக்கட்டி ஒழுங்கையில் அமைந்துள்ள 18 பரப்புத் தோட்டக்காணி இரண்டு கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: A.சுந்தரலிங்கம், 85, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். T.P. 021- 222 8005. (36896)

## வீடு வாடகைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளிப் பகுதியில் மாடிவீடு வாடகைக்குண்டு. அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: விள. இல.2633, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி-43659)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 27.06.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூரிலும் பெற்றுக் கொள்ளலாம். (36808)

## தவறிவிட்டது

NOKIA 8310 கையடக்கத் தொலைபேசி காரைநகர் புதுறோட்டுக்கும் பொன்னாலைப் பாலத்துக்கும் இடையில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்துக் கொடுப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: 077 - 6341599, வாணர், புது றோட், முருகன் கோயிலுக்கு முன், காரைநகர். (36986)

திருமதி மதுரநாயகம் கோமளம் என்பவரது தாலிக்கொடி 25-06-2005 சனிக்கிழமை பகல் 12.30 மணிக்கு காரைநகர் தேவாலய வீதிக்கும் - வலந்தலை ஆஸ்பத்திரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வலந்தலை ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (37004)

## திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் இந்து, கிறிஸ்தவ மணம்க்களின் ஜாதகங்கள் உள்ளன. தொடர்பு: கல்யாண வேலன் சர்வதேச திருமண சேவை, இல.72, கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (37000)

# இடம்பெயர்ந்தோருக்குக் காணிகளை வழங்க பொது விழிப்புணர்வு தேவை

**19.06.2005 உலக அகதிகள் தினத்தன்று 'இவர்களை மறந்து விட்டோமா?' என்ற தலைப்பில் உதயனில் வெளியாகிய கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் பற்றி வாசகர் ஒருவர் தனது கருத்துக்களை வரைந்து அனுப்பியுள்ளார். இடம்பெயர்ந்த மக்களின் காணிப் பிரச்சினை, அவர்களைப் பலவந்தமாகக் காணிகளில் இருந்துவெளியேற்றுதல் போன்ற அவல நிலைமைகளுக்கான தீர்வு பற்றி அவர் தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்கிறார்.**

உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து இடம்பெயர்ந்து வாழ்கின்ற மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். இவற்றில் பிரதானமான பிரச்சினையாக அவர்களுக்கான வதிவிடத்துக்கான நிலமே உள்ளது. இம்மக்கள் முகாமில் வாழ்ந்தாலென்ன வெளியில் வாழ்ந்தாலென்ன அவர்கள் திரும்பிச் செல்லும் வரையும் நிம்மதியாக வாழ்வதற்கான நிலத்துககான அனுமதி அவசியமாக உள்ளது.

நாங்கள் சமூகப் பணியாளர்களாக இந்த மக்களுடன் பணியாற்றியுள்ள வேளையில் எதிர்நோக்கிய இப்பாரிய பிரச்சினையில் எவருமே பொறுப்புக்களை ஏற்கவோ, தீர்வுகளைக் காணவோ தயாராக இல்லாமையைக் கண்டுள்ளோம். இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களிலும் வெளியிலும் மிகவும் மோசமான நிலையிலுள்ள இடங்களில் அவர்களுக்கான குடிசைகள் அமைத்துக்கொடுக்கும் வாய்ப்புக்கள் உள்ள சந்தர்ப்பங்களில் அந்த நிறுவனங்கள் அவர்களுக்கான குடிசைகள் அமைப்பதற்கான காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதங்களை எதிர்பார்க்கின்றார்கள்.

1990 காலப் பகுதியில் பாரிய இடம்பெயர்வுகள் ஏற்பட்ட நேரத்தில் மக்களிடம் இருந்த அனுதாப உணர்வுகள், இடம்பெயர்ந்த மக்களுக்கு எவ்வகையிலும் மாற்று இடவசதிகள் ஏற்படுத்தவேண்டும் என்பதற்குச் சாதகமான தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாக அமைப்பு என்பன நிலப்பற்றாக்குறை நிறைந்த குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிலத்தைத் தேடிக்கொடுத்தன. இன்று யாழ்.குடாநாட்டில் மிக வேகமாக ஏற்பட்டுள்ள காணிகளுக்கான விலை ஏற்றம், மக்களிடையே கடந்த கால அவலங்களை மறந்துவிட்டபோக்கு என்பனவும் இடம்பெயர்ந்த மக்கள் உயர் பாதுகாப்பு வலயத்துக்கு மீளச் செலலமுடியாது என்பதால் தமது காணிகளுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் என்பன எப்படியாவது இவ்களைக் காணிகளில் இருந்து எழுப்பிவிடவேண்டும் என்று உறுதியாகச் செயற்படவைக்கிறது.

இதில் மிகவும் அவசியமான தவிர்க்க முடியாத தேவைகள் காரணமாக ஒரு சிலருக்குத் தமது காணிகளை மீளப்பெறவோ விற்கவோ வேண்டிய தேவை உள்ளதையும் அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டியதையும் யாரும் உதாசீனப்படுத்திவிடமுடியாது.

இனறு சகல தரப்பினருமே தனி மனிதர்களுடைய காணிகளை மீளப்பெறும் உரிமைக்குச் சாதகமாகவே பேசுகிறார்கள். இது மறுக்கமுடியாத நியாயமாகவும் உள்ளது. அதேவேளை, உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் பல ஆயிரக்கணக்கான மக்களுடைய காணிகள், வாழ்விடங்கள் பறிக்கப்பட்டுள்ளபோது அவர்களுக்கு இந்த நியாயம் பொருத்தப்பாடாக இல்லையே. இன்றைய யதார்த்த சூழ்நிலையில் இடம்பெயர்ந்து வாழ்கின்ற மக்களை அவர்களது தற்போதைய வாழ்விடங்களில் இருந்து பலவந்தமாக வெளியேற்றுவது, அல்லது அவர்கள் வெளியேறக்கூடிய வகையில் மறைமுகமாக நெருக்கடிகளைக் கொடுப்பது, அவர்கள் மீளச்செல்லும் வரை அவர்களது வாழ்விடங்களைச் சீராக்க மறுப்பது என்பன அப்பட்டமான மனித உரிமை மீறல்களாகப் பார்ப்பதில் என்ன தவறு இருக்கமுடியும்?




இன்று யுத்தமில்லாத அமைதிச் சூழலில் நாங்கள் கடந்தகால துயர வாழ்வை மறந்துவிடமுடியாது. உயர்பாதுகாப்பு வலயங்கள் நிரந்தரமானவை அல்ல. யுத்தமோ அமைதியோ இறுதியில் உயர்பாதுகாப்பு வலயங்களை இல்லாது செய்துவிடும். இந்த மக்கள் தமது இடங்களுக்கு மீளச்சென்றுவிடுவார்கள். இது மறக்க முடியாத உண்மையாகும். அதுவரை அந்த மக்களை அரவணைத்து அவர்கள் சந்தோஷமாக அவர்களது இடத்திற்குச் செல்வதற்கு எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும்.

குடாநாட்டிலுள்ள நலன்புரி நிலையங்களுக்கு அரச நிர்வாகமே பொறுப்பாக உள்ளது. எந்த ஒரு நலன்புரி நிலையத்தில் காணிப் பிரச்சினையாக இருந்தாலும் அதற்கான மாற்றுத் தீர்வைக் காண வேண்டிய பொறுப்பு அரச நிர்வாகத்தினுடையதேயாகும். காலம் காலமாக காணிப பிரச்சினை உள்ளது. ஆகவே, குடிசைகளை திருத்தமுடியாது என்று கூறுவது தமது பொறுப்பில் இருந்து விலகிக்கொள்ள முயலும் நடவடிக்கையேயாகும்.

மனித உரிமைகளுக்காகச் செயற்படும உதவி நிறுவனங்களும் காணிப் பிரச்சினை உள்ளது என்பதால் வாழ்விடங்களை அமைக்காது விடுவதுடன் நின்றுவிடாது இவைகளுக்கான தீர்வுகளைக் காண்பதற்கான வழிகளை அரச நிர்வாகத்துடனும் ஏனைய சகல தரப்பினருடனும் கலந்துரையாடி அந்த மக்களுக்கான சாதகமான தீர்வுகளைப் பெறுக் கொடுக்க வேண்டிய பொறுப்பே அவர்கள் முன்னுள்ள உச்சமான உன்னதமான பணி என்பதை கவனத்தில் எடுக்கவேண்டும்.

எங்களுடைய சமூகம நல்லதொரு சமூகமாக எதிர்காலத்தில் வாழ்வதற்கு அந்தச் சமூகத்தினுடைய வாழ்விட ஒழுங்குகள் சீராக அமையவேண்டியது அவசியமாகும். ஆகவே, காணியுடையவர்கள் தமது காணிகளைத் தற்காலிகமாக வழங்கி இடம்பெயர்ந்த மக்களுடைய வாழ்விடங்களை அமைக்க, விழிப்புணர்வை ஏற்படுத்த பொதுஅமைப்புக்களும், பொது ஆர்வலர்களும் வழிகாட்டுவதுடன், காணி உடையவர்களும் இதனை மனமுவந்து செய்யவும் தமிழீழ விடுதலைப் புலிகள் வழிகாட்ட வேண்டும். இந்த விடயங்களில் எடுக்கப்பெற்ற நடவடிக்கைகள் மூலம் அந்த மக்களை நாம் மறந்துவிட வில்லையென்பதை உறுதிப்படுத்தமுடியும்.

1. உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளை குறைக்கச் செய்வதன் மூலம் அதிகபட்சமானவர்களை மீளக்குடியேற வழிகாணல்.

2. நலன்புரி நிலையங்களில் காணிப்பிரச்சினை உள்ள இடங்களில் -

அ) காணி உரிமையானவர்களுடன் கதைத்து தீர்வுகாண முயலதல்

ஆ) மாற்று காணிகளை பெறமுடியுமா? என்பதை பரிசீலித்து மாற்று ஒழுங்குகளைச் செய்தல்

இ) மாற்றுக்காணிகளை அல்லது அதே காணிகளை சாத்தியப்பட்டால் விலைக்கு கொள்வனவு செய்து கொடுப்பதைக்கூட அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் பரிசீலிக்கவேண்டும்.

ஈ) மாற்று இடம் சாத்தியப்படாதவிடத்து அரச நிர்வாகம் விசேட அதிகாரங்களின் கீழ் அதேயிடத்தில் தற்காலிக குடிசைகளைத் திருத்தத் தீர்மானங்களை எடுத்தல்.

இவ்விடயங்களில் சம்பந்தப்பட்ட சகலரும் தனி நபர்களுடைய காணிகளை மீளப்பெறும் அவர்களது உரிமைக்கு வழங்குகின்ற அங்கீகாரத்தைப் போன்றே இடம்பெயர்ந்த மக்கள் தாங்கள் வாழ்கின்ற இடங்களில் குறைந்த பட்சவசதிகளுடனாவது வாழக்கூடியதாக தமது குடிசைகளை திருத்திக்கொள்ளும் உரிமை உடையவர்களாக வாழக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய பொறுப்புடையவர்களாக உள்ளதையும் மறந்துவிடமுடியாது. ☆

**சொ.லோகநாதன்,** கொக்குவில்

**நாவற்குழியூர் அமரர் கணபதி வேலுப்பிள்ளை (சின்னத்துரை) அவர்களின் சிவபதம் குறித்த**

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

காலம்: 29-06-2005 புதன்கிழமை
நேரம்: பகல் 10.30 மணி முதல்
இடம்: ஸ்ரீ ஐங்கரன் மணி மண்டபம், டச்சுறோட், சாவகச்சேரி

முக்கிய நிகழ்வுகள்
- ▲ ஆத்மசாந்திப் பிரார்த்தனை
- ▲ நினைவு மலர் வெளியீடு - 'சிறப்பான விரதங்கள்'
- ▲ ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியை ஸ்தாபித்தல்
- ▲ நினைவுப்பேருரை - 'ஆத்மாவும் சைவசிந்தனையும்'
- ▲ பெரியோர்களின் உரை

மேற்படி நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன உபசரனையிலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன்கோயில் வீதி, சாவகச்சேரி. (37005)(26-11-14)

திருமதி யோகம்மா வேலுப்பிள்ளை குடும்பத்தினர்.

# வீதி திருத்தம்

தொல்புரம்,ஜூன்27

பல வருடங்களாக மிக மோசமான நிலையில் பழுதடைந்து காணப்பட்ட மூளாய் - மாவடி பிரதான வீதி திருத்திச் செப்பனிடப்பட்டுள்ளது.

குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இவ்வீதியில் பல விபத்துக்கள் இடம்பெற்று வந்தன.

தற்போது இவ்வீதி திருத்தப்பட்டதனால் மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு வசதியாகவுள்ளது.

இருந்தும் தொல்புரம், வட்டுப்பிளவத்தை ஆகிய கிராமங்களைப் பிரதான வீதியோடு இணைக்கும் முங்கோடை வீதி படுமோசமான நிலையிலேயே இப்போதும் காணப்படுகிறது. இதனால், வீதியால் பயணம் செய்வோர் தொடர்ந்தும் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

(த-110)

# 'முதியோர்கள்' சஞ்சிகை வெளியிட ஏற்பாடு

எதிர்வரும் ஐப்பசி மாதம் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு 'முதியோர்கள்' எனும் சஞ்சிகையொன்றை சமூக சேவைகள் திணைகளம் வெளியிடவுள்ளது. இதற்கு முதியோர்கள் தொடர்பான கட்டுரைகள், கவிதைகள் போன்ற ஆக்கங்களைத் தயாரித்து அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் தம்மிடம் வழங்குமாறு வலி.கிழக்குப் பிரதேச செயலக சமூகசேவை அலுவலர் வே.தபேத்திரன் கேட்டுள்ளார்.

(த-178)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 690 |
| திகதி | 24-6-2005 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு

செல்லுபடியாகும் தொடர் இல. 5505357-5520291

லக்கினம் கன்னி

வெற்றி இலக்கங்கள்: 26 27 29 37

ஜக்பொட் பரிசு ரூபா.14,02,450/- வெல்லப்பட்டுள்ளது

இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,28,854 | 10/- | 32,88,540/- |
| 2.இலக்கங்கள் | 30,184 | 20/- | 6,03,680/- |
| 1.இல லக்கினம் | 29,835 | 30/- | 8,95,050/- |
| 2.இல லக்கினம் | 2,737 | 100/- | 2,73,700/- |
| 3.இலக்கங்கள் | 799 | 500/- | 3,99,700/- |
| 3.இல லக்கினம் | 85 | 5,000/- | 4,25,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 14,02,450/- | 14,02,450/- |
| மொத்தம் | 3,92,503 | - | 86,40,170/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 86,40,170/- தொடர் இல. 4560850 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 மே 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5506975-1-96
5514059-3-23
5509347-0-51
5506007-7-28
5508115-4-43

## 25.06.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300365039 இலிருந்து 300382240 வரை

சீட்டிழுப்பு இல. 1618

14 32 36 43 சுப்பர் எண் 06

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.27,45,550/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 27,45,550/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 23 | 5,000/- | 1,15,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 458 | 1,000/- | 4,58,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,441 | 500/- | 7,20,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,129 | 40/- | 8,85,160/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,050 | 20/- | 4,21,000/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,13,913 | 10/- | 31,31,130/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 72,38,790/-

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 35,84,350/-

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் ... 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

300377337-0-03
300378800-1-36
300368141-8-46
300375462-0-77
300365330-8-64

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.





ஆழிப்பேரலையின் 6ஆம் மாத நினைவுகளில்...



ஆழிப்பேரலையின்போது மணற்காட்டில் உயிரிழந்த 71 பொதுமக்களின் நினைவு நிகழ்வுகள் நேற்று மணற்காடு சேமக்காலையில் நடைபெற்றன. அங்கு உயிர்நீத்த தமது உறவுகள் புதைக்கப்பட்ட இடங்களின் மேல் புரண்டு கண்ணீர் விட்டுக் கதறி அழும் காட்சிகள்.
(படங்கள் : சி.சுந்தரலிங்கம் கரவெட்டிச் செய்தியாளர்)

# அரச ஊழியர் விபத்து மரண உதவுதொகை அதிகரிப்பு

## உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவிப்பு

அச்சுவேலி,ஜூன்27

அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு "அக்ரஹாரா" கட்டாய காப்புறுதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விசேட பாதுகாப்பு அளிப்புக்கள் மற்றும் விபத்து மரண உதவுதொகை இனிமேல் 6 லட்சம் ரூபாவரையில் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட பிரேரணை மூலம் திருத்தி அமைக்கப்பட்ட "அக்ரஹாரா" காப்புறுதி தொடர்பான புதிய நடைமுறைகள் 01.01.2005 முதல் நடைமுறைக்கு வருவதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த மே18 ஆம் திகதி வெளியிடப்பட்ட நிர்வாகச் சுற்றிக்கை 12/2005 பிரகாரம் இதுவரைகாலமும் அரச ஊழியர்கள் "அக்ரஹாரா" காப்புறுதிக்கு மாதாந்தம் செலுத்தி வந்த மாதாந்த உதவுதொகை 11ரூபாவில் இருந்து 75 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

24 மணிநேரமும் செல்லுபடியாகும் இந்தக் காப்புறுதித்திட்டம் ஊழியர் சேவையில் இருக்கும் 60 வயதுவரையும் நடைமுறையில் இருக்கும்.

புதிய காப்புறுதியானது I மருத்துவக் காப்புறுதி, II தனிநபர் திடீர் விபத்துக்கள் மற்றும் இயற்கை மரணங்கள் தொடர்பான காப்புறுதி, III கடன் உறுதியளிப்பு காப்புறுதி என மூன்று பிரிவுகளைக் கொண்டதாக இருக்கும்.

மருத்துவக்காப்புறுதித் திட்டத்தின் கீழ் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைபெறுதல், சத்திரசிகிச்சைச்செலவு ஆகியவற்றின் வகைப்பாட்டிற்கும் சிகிச்சையின் தன்மைக்கும் ஏற்ப ஆகக்கூடியது 3½ லட்சம் ரூபாவரையில் வழங்கப்படும்.

மூக்குக் கண்ணாடி வழங்குவதற்கு மூன்று வருடங்களுக்கு ஒருதடவை வீதம் 3500 ரூபாவும் -

விபத்து - மரணம் தொடர்பான காப்புறுதித்திட்டத்தின் கீழ், விபத்து மரணத்துக்கு 6 லட்சம் ரூபாவரையான கொடுப்பனவும் -

இயற்கை மரணத்திற்கு 50 ஆயிரம் ரூபா வரையான கொடுப்பனவும் வழங்கப்படவிருப்பதோடு, விபத்தினால் உடல் உறுப்புக்களின் இழப்புக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

புதிய நடைமுறையின் பிரகாரம், குடும்ப உறுப்பினர்களுக்கும் உரிய இழப்பீடுகளை பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

(எ-11)

# பண்டிதமணி என்றும் நினைவில் நிலைநிறுத்தப்பட வேண்டியவர்



பண்டிதமணி
சி.கணபதிப்பிள்ளை



நவாலியூர்
சோமசுந்தரப்புலவர்

**இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 106ஆவது பிறந்ததினம் இன்று. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் கார்த்திகைத் திருவிழா விசேட உற்சவ காலங்களில் பண்டிதமணி அவர்கள் திருநெல்வேலியில் இருந்து நல்லூருக்குச் சென்று முருகனை வழிபடுவதுண்டு. ஆறுமுகசுவாமி வாசலில் வழிபாடு நீண்டநேரம் நடக்கும். கார்த்திகைத் திருவிழா அன்று பின்னேரம் சென்றார்கள். யானும் உடன் சென்றேன்.

மூலஸ்தான வழிபாடு முடிந்து ஆறுமுகசுவாமி வழிபாடு நடந்தது. அப்பொழுது பருத்தித்துறை வீதி ஆறுமுக சுவாமி சந்நிதி வாசலில் அமைந்திருந்தது. பண்டிதமணி அவர்கள் வெளிவீதியில் தெரு வோரமாக நின்று வழிபாடு செய்தார்கள். வயோதிபர் ஒருவர் பண்டிதமணி அவர்களுக்குப் பின்னால் போய் நின்றார். நீண்ட வெள்ளைத் தாடி, கண்ணுக்கு ஒளி கொடுக்கும் மூக்குக்கண்ணாடி, நெற்றியில் திரிபுண்டரம், கழுத்தில் உருத்திராக்கம், தூய்மையான வேட்டி சால்வை. இவர் ஒரு சாமியராக இருக்கலாம் என்ற எண்ணம் எனக்கு உண்டானது. பண்டிதமணி அவர்கள் ஆறுமுக சுவாமி வழிபாட்டை முடித்துக்கொண்டு வலது பக்கமாகத் திரும்புகின்றார். கிழவனார் பண்டிதமணி அவர்களது முதுகை இலோசாகத் தடவியபடி பண்டிதமணி அவர்களைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். பண்டிதமணி அவர்களும் இருகரங்களையும் கூப்பி அந்தக் கிழவனாருக்கு மரியாதை செய்தார்.

"உங்கள் பாட்டு நன்றாக இருக்கிறது. எனது பதிலைப் பாடல்களாக எழுதி உங்களுக்கு அனுப்பிவைத்துள்ளேன்" என்றார் புலவர் அவர்கள்.

பண்டிதமணி அவர்கள் என்னைப் பார்த்து இந்தப் பெரியவர்தான் எங்கள் அன்புக்குரிய தங்கத் தாத்தா. நவாலியூர் சோமசுந்தரப் புலவர் என்றார்கள்.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நான் நேரிற் பார்த்து ரசித்த இந்தக் காட்சி இப்பொழுதும் பசுமையாக நெஞ்சில் நிழலடிக்கொண்டிருக்கிறது.

இச்சம்பவத்துக்குச் சில நாள்கள் முந்தி புலவர்களது அருமைப் புதல்வர் புலவர்மணி, பண்டிதர் சோ.இளமுருகனார் அவர்கள் திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள பண்டிதமணி அவர்களது குடிலுக்கு வந்திருந்தார்கள்.

இது அப்பா (புலவர்) பாடிய பாடல் என்று கூறியவாறு சில கடதாசிகளைப் பண்தடிமணி அவர்களிடம் கொடுத்தார். அந்தக் கவிதைக்குப் புலவர் அவர்கள் கொடுத்த தலைப்பு "தாரமாய்த் தாயானாள் கை" என்பதாகும். பாடலை வாசித்துப் பார்த்த பண்டிதமணி அவர்களது முகத்தில் மலர்ச்சி காணப்பட்டது. 1929 இல் புலவரவர்கள் நோயினால் (சன்னி) மிகவும் கஷ்டப்பட்டார். நொய்வும் தொடர்ந்தது. அவருடைய அன்பு மனைவியார் சின்னம்மை அவர்கள் புலவர் அவர்களது நோயைக் குணப்படுத்தும் நோக்கமாகப் பலவித தொண்டுகளையும் செய்தார்கள். அம்மையாரின் கையின் சேவையைப் பாராட்டிப் பாடப்பட்ட பாடலே தாரமாய்த் தாயானாள் கை" என்பதாகும் எணபது வரிகளைக் கொண்ட கலி வெண்பா அது. வரிகள் தோறும் அம்மையாரின் கைச் சிறப்பை எடுத்துக்கூறுகின்றார் புலவர் அவர்கள்.

*"சீராரு மன்றற் றிருநாளில் செந்தீயை*
*நேராகச் சூழ்ந்துவரு நேரத்தி லாராநல்*
*லன்படனே என்கையோ டணைய வந்த*
*பொன்புனையுஞ் செல்வப் புதுமலர்க் கை..."*
என்று தொடங்கி

"தாரமாய்த் தாயானாள் கை" என்பதோடு முற்றுகின்றது பாடல்.

சின்னம்மையின் கைச்சிறப்பைக் கண்டவரான பண்டிதமணி அவர்களுக்கு சின்னம்மையின் கண்ணுக்கும் புலவர்கள் பாடியிருக்கலாமே என்று ஆவல் பிறந்தது.

### கண்ணுக்கு வேண்டுங்கவி

*பின்றூங்கி முன்னெழூஉம் பெற்றியுரைத்தார் தேவர்*
*உன்றாரத் துக்குறக்கமுண்டுகொலோ - குன்றாமே*
*தணனென் தமிழ்ப்புலவோய் தாயானாள் கையிருக்கக்*
*கண்ணுக்கு வேண்டுங் கவி.*

என்ற பாடலை (வெண்பா) புலவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தார். பாடலைப் படித்துப் பெரிதும் விம்மிதமுற்றவரான நவாலியூர்ப் புலவர் அவர்கள் தமது மனைவியார் சின்னம்மையின் கண்ணைப் பற்றிப் பாடல்கள் புனைந்து, பண்டிதமணி அவர்களுக்கு அனுப்பிவைத்தார்கள். பாடல்கள் இவை.

### வெண்பா

*"துன்பிற் சுடர் முத்தந் தூக்கலாற் றொண்டு செயும்*
*அன்பிலிரவு மலர்தலால் - நண்ப கேள்*
*விண்ணுக்கும் விண்ணவர்க்கு மொக்குமென*
*வேறுரைப்பேன்*
*கண்ணுக்கு வேண்டுங் கவி.*

*மானன்று வேலன்று வாளன்று கோலன்று*
*மீனென் றெனவுரைத்தல் விட்டுரைப்பேன் - ஊனொன்று*
*நன்மைக் கலந்து நலிவிற்குக் கூம்பியிடர்ப்*
*புன்மைக்கு முந்துதிர்க்கும் பூ*

புலவர்களது கவிதா சாமர்த்தியத்தைப் பெரிதும் மெச்சியவராக பண்டிதமணி அவர்கள் மனங்குளிர்ந்தார்.

## தங்கத்தாத்தாவுடனான நல்லூர் சந்திப்பு

அந்தக் காலத்தில் இச்சம்பவங்கள் எல்லாம் பத்திரிகைகளில் பிரசுரமாயின. "தாரமாயத் தாயானாள் கை" என்ற நவாலியூராரின் பாடல் இன்றும் உயிர் உள்ள பாடலாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

### இலங்கை வளம்

புலவர்களது பாடல்களின் தொகுப்பே "இலங்கை வளமும் தலாவிசாலமும்" என்ற நூலாகும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த சமயம் இலங்கை வளம் குறித்துப் பாடலாம் என்றும், பரிசில்கள் வழங்கப்படும் என்றும் அப்போதிருந்த அரசு செய்தி வெளியிட்டது. பலரும் பாடினார்கள் புலவர்களும் பாடினார்கள். புலவர்களுக்கே முதற்பரிசு கிடைக்கலாம் என்று கற்றோர் உலகு எதிர் பார்த்தது. எதிர் பார்த்தபடி நடக்கவில்லை. அந்தக் கவிதைகளே 'இலங்கை வளம்' என்ற பெயரில் 1950இல் வெளிவந்தன.

நூலின் பதிப்பாசிரியர்கள் பதிப்புரையில் "பதினையாயிரம் பாடல்களை எழுதிய ஒரு செந்தமிழ்ப் புலவனைச் சிறப்பித்தற்குத் தமிழரசு இல்லாமை வருந்தத்தக்கது. மூவேந்தர் தனியரசு புரிந்த ஞான்று பிறக்கும் பேறு எங்கள் புலவருக்கிருப்பின் எத்தனையோ காவியங்கள் வெளிவந்திருக்குமன்றே. சொல் வளமும் பொருள் வளமும் இன்றி வறிய சொற் கோப்புக்களால் கட்டியெழுப்பும் வெறும் பாட்டுக்களுக்கே இந்நாளில் மதிப்புண்டு. புரட்சிக்கவி என்னும் ஓரரக்கன் புகுந்து தமிழிலக்கண வரம்பினையும் செந்தமிழ் மரபு நெறியையும் மெய்ப்புலமையையும் அழித்து வருதலை யாம் எல்லோரும் உணர்கின்றோம். தமிழ்ப் புலமைக் குறைவே இதற்குக் காரணமென்பது புனைவன்று. புது நாகரிக வாழ்வும் ஆங்கிலக் கல்வியும் தமிழ்ப் புலமையை அழித்துவிட்டன"

என்கின்ற பகுதி சிந்தனைக்குரியது. இந்த நூலுக்கு நீண்டதொரு அணிந்துரையை வழங்கியிருந்தார் பண்டிதமணி அவர்கள்.

*"ஆடிப் பிறப்பொடு கத்தரித் தோட்டமும்*
*ஆக்கி அளித்த புலவர் பிரான்*
*தேடக் கிடைக்காத தென்னிலங்கை வளம்*
*தேன் சொரியுந் தமிழ் மாந்துதுமே"*
என்றும்
*"இலங்கைவளம் கேளாத செவியென்ன செவியே*
*இரும்பாலே செம்பாலே செய்திட்ட செவியே"*

என்றும் நூலினை வியந்து பாராட்டி இருக்கிறார் பண்டிதமணி அவர்கள்.

### சிறுவர் செந்தமிழ்

புலவர்களது அடுத்த பாடற்றொகுதி 'சிறுவர் செந்தமிழ்' என்ற தலைப்பில் 1955இல் வெளிவந்தது. அந்நூலுக்கும் பண்டிதமணி அவர்களே அணிந்துரை வழங்கி இருந்தார். புலவரவர்களுக்குத் "தங்கத் தாத்தா" என்று பெயருஞ் சூட்டியிருக்கிறார் பண்டிதமணி அவர்கள்.

"தங்கத் தாத்தா காட்சியளிக்கின்றார் வங்கத் தாத்தாவை அறிந்திருப்பீர்கள். நமது தாத்தா தங்கத் தாத்தா. தங்கம் என்றால் ஈழம், ஈழம் - இலங்கை தாத்தாக்கள் எப்போதும்தாடியிலே வெகு கவனம். மருந்துக்கும் கறுப்பில்லாத தாடிக்கும் கண்ணூறு வந்து விடுமோ என்றுதான் சதா பயம். எங்கள் தாத்தாவின் புத்தியைப் பாருங்கள்"

'சிறுவர் செந்தமிழ்' என்ற நூலிலே முதலாவது பாடம் தாடி அறுந்த வேடன். தமது அணிந்துரையில் தாடிக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கின்றார் பண்டிதமணி அவர்கள்.

"நாவலரைப் பாடிய நவாலியூர்ப் பாவலனார் அல்லவா உங்கள் தாத்தா. 'இன்றைய ஈழத்துப் புலவர் சிரோமணி எங்கள் தாத்தா' என்று அவர் புகழைப் புட்பாஞ்சலி செய்து போற்றுங்கள். அவரின் தூய செந்தமிழ்ப் பாடல்களைப் பாடுங்கள்; பாடியாடுங்கள்; இனியுங்களுக்கென்னகுறை நீங்களெல்லாம் இனிக் கவிஞர்கள்."

என்று அணிந்துரையின் இறுதிப் பகுதியிலே சிறுவர்களை உற்சாகப்படுத்துகின்றார் பண்டிதமணி அவர்கள்.

*"கைக்கவி யிருக்கக் கட்கவி வேண்டிய*
*அற்புத நுண்மதிப் பொற்புறு செல்வ"*

என்றும் "வண்டமி ழுதமறி பண்டித மணியே" என்றும் பண்டிதமணி அவர்களைப் போற்றிப் புகழ்ந்தார் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள் என்பதும் ஈண்டு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

**- ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்.**

## சேவை நிறைவில் பாராட்டி வாழ்த்துகின்றோம்



தம் அயராத உழைப்பால்
சிறப்புறச் சேவையாற்றி
அகவை அறுபதில்
ஓய்வுபெறும் அதிபர்
**திருமதி பரமேஸ்வரி P.J.தோமஸ்**
அவர்களின் சேவை நிறைவில்
பல்லாண்டு காலம் வளமுடன்
வாழ வாழ்த்துகின்றோம்

சேவை விவரம்

யா/நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயம் ஆசிரியர்
1971.09.01 - 1972.01.19
யா/நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாலயம் ஆசிரியர்
1972.01.20 - 1974.04.30
பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
1974.05.01 - 1975.12.31
யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம் ஆசிரியர்
1976.01.01 - 1987.02.28
யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி ஆசிரியர்
1987.03.01 - 1994.01.31
யா/நெடுந்தீவு மாவலித்துறை றோ.க.வித்தி. அதிபர்
1994.02.01 - 2005.06.26

நெடுந்தீவுக் கோட்டம். கோட்டக்கல்விப் பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்கள்.

(36946) (39-14-15-26)


# தூவல் நீர்ப்பாசன கருவிகள் விநியோகம்

வலிகாமம் தெற்கு,ஜூன் 27

ஐ.நா.அபிவிருத்தித்திட்ட நிறுவனத்தினரின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் "சிற்றிகார்டின்" நிறுவனம் உடுவில் கமநலசேவை நிலையத்தைச் சேர்ந்த ஏழு விவசாயிகளின் பயன்பாட்டிற்கென மானிய அடிப்படையில் தூவல் நீர்ப்பாசனக் கருவி இயந்திரங்களைப் பொருத்திக் கொடுத்துள்ளது.

ஒவ்வொன்றும் 25ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இத்தூவல் நீர்ப்பாசனக் கருவிகளுக்கான செலவில் அரைவாசித் தொகையினை மானியமாக நிறுவனம் வழங்கியுள்ளது.

இணுவில் கிழக்கு, இணுவில் மேற்கு, உடுவில் மத்தி, உடுவில் வடக்கு, சங்குவேலி, சுன்னாகம் தெற்கு, நவாலி ஆகிய ஏழு விவசாய சம்மேளனங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இவ்வாறு தூவல் நீர்ப்பாசன இயந்திரங்கள் பொருத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.(3-152)


**விற்பனைக்கு**
A/L
வணிகக்கல்வி -I
2006, 2007 பிரிவு
இ.செல்வநாயகம்
விலை 150 ரூபா
புத்தகசாலைகளில் உண்டு.
(36577) (21-14-15-26)


# 'பொப்வெப்' திட்ட கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயத்தில் 'பொப்வெப்' திட்டத்தில் இணைந்துள்ள பாடசாலைகளுக்கான கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி பகல 12மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தெரிவித்தார். (3-117)


**DIALOG TELECOM பங்குகள்**
**சிறந்த முதலீட்டு வாய்ப்பு**

DIALOG (GSM) TELECOM நிறுவனப் பங்குகள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளன. நீங்கள் பங்குகளை கொள்வனவு செய்யவும், மேலதிக விபரங்களுக்கும் கீழ்வரும் முகவரிகளில் June 30 இற்கு முன்பு தொடர்புகொள்ளவும்.

HNB வங்கிக் கிளை, சுன்னாகம்.
HNB Stock Brokers
HNB வங்கி யாழ்.கிளை, யாழ்ப்பாணம்.
HNB வங்கிக் கிளை, நெல்லியடி.

உங்கள் வளர்ச்சியின் பங்காளி

T.P.: 021-222 7882, 0777 164966.
தலைமை அலுவலகம் 011 - 2663663

(C-43545)(26-14-15)



## இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து



கொம்மந்தறை, வல்வெட்டித்துறையைச்சேர்ந்த விஜயகுமார் -சுமதி தம்பதியரின் செல்வப் புதல்வி இந்துஜா தனது 2 ஆவது பிறந்த தினத்தை இன்று (27.06.2005) திங்கட்கிழமை குதூகலத்துடன் கொண்டாடுகின்றார்.

செல்வி இந்துஜா
2005.06.27

இந்துஜாவை அன்பு அம்மா, அப்பா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, பெரியண்ணா, பெரியக்கா, சின்னண்ணா, சின்னக்கா, லண்டன் பெரியமாமா, பெரியத்தை, மச்சான், சின்னமாமா, சின்னத்தை, மச்சாள், குட்டிமாமா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் நெற்கொழு வைரவர், மனோன்மணி அம்பாள் அருளினால் நோய் நொடியின்றி சகல கலைகளும் கற்று சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல் :மகாலிங்கம் சுதாகரன் (லண்டன்).

(C-43570)(51-14-19)



## மனமுவந்து வாழ்த்துகின்றோம்

ஈழத்தின் தென்மோடி நாட்டுக்கூத்திலும் இசை நாடகங்களிலும் நவீன ஆற்றுகைகளிலும் களம் பல கண்ட



**அண்ணாவியார் பாலதாஸ்**



**பிரான்சிஸ் யூல்ஸ் கொலின்**

*இவர்கள் இருவரையும்*

நேற்று (26-06-2005) ஞாயிற்றுக்கிழமை பாஷையூர் அபிவிருத்திக் குழுவின் ஆண்டு நிறைவுவிழா கலைநிகழ்வில் வண.பிதா பிலேந்திரன் (கிறிஸ்தவ - இஸ்லாமிய நாகரீகத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்) அவர்கள் *அண்ணாவியார் பாலதாஸ்* அவர்களுக்கு விருது வழங்கியும் *திரு.பிரான்சிஸ் யூல்ஸ் கொலின்* அவர்களுக்குப் "பல் கலை ரத்னா" எனும் பட்டம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டதையிட்டு நாம் மகிழ்ச்சியுடன் பாராட்டி மனமுவந்து வாழ்த்தி அவர்களின் கலைச்சேவை தொடர எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துபவர்கள்: (திருமறைக் கலாமன்ற மூத்த கலைஞர்கள்)
A.V. ஆனந்தன்,
A. பேக்மன் ஜெயராஜா,
C.M. நெல்சன்,
V.J. கொன்ஸ்ரன்ரைன்,
M. ஜேசுதாசன், N.S. ஜெயசிங்கம்.

(36992)(26-14-15)



உ
சிவமயம்

## மங்களகரமான புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம்
ஆனி மாதம் 13ஆம் நாள் இன்று (27-06-2005)
திங்கட்கிழமை (பழைய நேரம்)
மு.ப. 11.55 மணி முதல் 1.25 மணி வரையுள்ள
சுபமுகூர்த்த சுபவேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப் பெற்ற

**S.K.T. மகாலட்சுமி ஜுவலேர்ஸ்**
**S.K.T. MAKALUXMI JEWELLERS**

என்னும் புதிய நகை வியாபார ஸ்தாபனத்தை
இறைவன் திருவருள் துணைகொண்டு திறப்பு விழா
செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது
உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து
விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

213B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் அருகில்).

தங்கள் நல்வரவை நாடும்:
உரிமையாளர் -
க.யோகதாஸ்.

(36941)(26-14-15) T.P.: 077 9182984.



## புதுக்கடைத் திறப்பு விழா

பருத்தித்துறை நகரில்
நிகழும் பார்த்திப ஆண்டு
ஆனி மாதம் 13ஆம் நாள்
இன்று (27-06-2005) திங்கட்கிழமை
காலை 9.00 மணி முதல் 11.25 மணி
வரையுள்ள சுபவேளையில்

**ஜமுனா ஸ்ரோர்ஸ்**
**(தம்ரோ தளபாட விற்பனை நிலையம்)**

என்னும் எமது வியாபார ஸ்தாபனத்தினை
இறைவன் அருளாலும் நல்லோர்
ஆசீர்வாதத்துடனும் ஆரம்பிக்கவிருப்பதால்
அத்தருணம் தங்களையும் நண்பர்களையும்
வாடிக்கையாளர்களையும் இந்நிறுவனம்
வளர்ச்சிபெற ஆதரவளிக்குமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

உரிமையாளர்
ஜமுனா ஸ்ரோர்ஸ் நெல்லியடி

பஸ் நிலையம் முன்பாக,
பருத்தித்துறை.
(தம்ரோ தளபாட யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்)

(36984)(26-14-15)

எம்மிடம் தளபாடங்கள் மற்றும் எல்லாவகையான டிஸ் அன்ரெனாக்களும் பெற்றுக்கொள்ளலாம்.

## எட்டு மாவட்டங்களுக்கிடையிலான
# உதைபந்தாட்ட, கரபந்தாட்ட போட்டிகள்: யாழ்ப்பாணத்தில் இவ்வாரம் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்27

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டுவரும் வருடாந்த விளையாட்டுப்போட்டிகளில் உதைபந்தாட்ட, கரபந்தாட்டப் போட்டிகள் இவ்வாரம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவிருக்கின்றன.

மாவட்ட மட்டங்களில் முதலிடம் பெற்ற அணிகள் இந்த மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றவிருக்கின்றன. இந்தப் போட்டி களில் பங்குபற்ற 7 மாவட்ட அணிகளும் யாழ்ப்பாணத்துக்கு வரவிருக்கின்றன.

கரபந்தாட்டப்போட்டி நாளையும் நாளை மறுதினமும் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் முதலாம் திகதிமுதல் நான்கு தினங்கள் யாழ். பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மாகாணமட்டப் போட்டிகள் முதற்றடவையாக யாழ்ப்பாணத்தில் இம்முறை நடத்தப்படுகின்றன.

இப்போட்டிகளை நடத்துவதற்காக மாகாண விளையாட்டுத்திணைக்கள அதிகாரிகள் குழு யாழ்ப்பாணம் வருகின்றது. (3-190)

## விளையாட்டு விழா

வட்டுக்கோட்டை,ஜூன்27

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ம.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சங்கானைக் கல்விக்கோட்டப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரமும் சிறப்பு விருந்தினராக சிவதமிழ்வள்ளல் சி.சச்சிதானந்தமும் கலந்துகொள்வர். (3-161-203)




# கரும்புலிகள் நாளை ஒட்டி புதுக்குடியிருப்பில் போட்டிகள்

முல்லைத்தீவு,ஜூன்27

எதிர்வரும் 5ஆம் திகதி இடம்பெறவுள்ள கரும்புலிகள் நாளை முன்னிட்டு புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல்துறையினரால் மாபெரும் மரதனோட்டப் போட்டி நடத்தப்படவுள்ளது.

ஆண், பெண் இருபாலாருக்குமாக நடத்தப்படவுள்ள இப்போட்டி எதிர்வரும் முதலாம் திகதி இடம் பெறவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.

ஆண்களுக்கான போட்டி வட்டுவாகல் சந்தியிலிருந்து புதுக்குடியிருப்புச் சந்திவரையும் பெண்களுக்கான போட்டி முள்ளியவளையில் இருந்து புதுக்குடியிருப்புச் சந்தியில் அமைந்துள்ள மாவீரர் மண்டபத்திலும் நிறைவடையும்.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் ஆண்கள், பெண்கள் இருபாலாரும் தமது பெயர் விவரங்களை புதுக்குடியிருப்புப் பிரதேச அரசியல்துறை அலுவலகத்தில் உடன் பதிவுசெய்து கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல்துறையினர் கேட்டுள்ளனர்.

போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டுவோருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (3-410)



சர்வதேச நாடுகள் இடையே சிங்கப்பூரில் அண்மையில் நடைபெற்ற வலைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்ட இலங்கை தேசிய அணியில் ஈவினையைச் சேர்ந்த சிவலிங்கம் தர்சினி இடம் பெற்றிருந்தார். அவர் சிறந்த பந்துப்பரிமாற்ற வீராங்கனை யாவார்.

இலங்கை தேசிய வலைபந்தாட்ட அணியில் இடம்பெற்ற வீராங்கனைகளுடன் தர்சினி காணப்படுகின்றார். (3-7)

# இன்றைய ஆட்டங்கள்

கரவெட்டி,ஜூன்27

கரும்புலிகள் நினைவாக தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவுடன் வடமராட்சி கரபந்தாட்டச் சங்கம் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடத்திவரும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ இரவு 8 மணி - விக்னேஸ்வரா வி.க. எதிர் கோப்பாய் ஐ.வி.க.

★ இரவு 8.30 மணி - தோப்பு இளைஞர் வி.க. எதிர் அண்ணா வி.க. (3-70-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்27

வடமராட்சி தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் வதிரி பொமோர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி - ஜேம்ஸ் வி.க. எதிர் கருணாகரன் வி.க.

★ பிற்பகல் 4.30 மணி - பொலிகை விநாயகர் வி.க. எதிர் அல்வாய் பாரதி வி.க. (3-203)

★ ★ ★

கைதடி,ஜூன்27

யாழ். மாவட்ட தாச்சிச்சங்கம், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் தனது விளையாட்டு மைதானத்தில் யாழ். மாவட்டரீதியில் லீக் முறையில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 5 மணி - சுதுமலை நாவலர் வி.க. எதிர் சுன்னாகம் கலைவாணி வி.க. (3-75-203)

# சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூன்27

அஸ்ரா கிண்ணத்திற்காக அகில இலங்கை ரீதியில் பாடசாலை அணிகளுக்கு இடையில் - 17 வயதுப் பிரிவினருக்காக - நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சென். பற்றிக்ஸ்கல்லூரி அணி வெற்றிபெற்றுள்ளது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.



முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 45 ஓவர்களில் சகல விக்கெட்டினையும் இழந்து 89 ஓட்டங்களினைப் பெற்றது.

கே.ஜனுஷன் 27 ஓட்டங்களினையும் ரி.கிருஷாந் 18 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

ஜே.சி.கொலின் 24 ஓட்டங்களினைக் கொடுத்து 4 விக்கெட்டினையும் ஆர்.பி.றொக்னோ 10 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி 41 ஓவர்களில் 8 விக்கெட்டினை இழந்து 206 ஓட்டங்களினைப் பெற்றது.

எஸ்.ஜெனான்ராஜ் 75 ஓட்டங்களினையும் எம்.மலின்குமார் 26 ஓட்டங்களினையும் வி.ஜே.லூட்ஷன் 27 ஓட்டங்களினையும் டபிள்யூ.ஐ.ஜக்ஷன் 24 ஓட்டங்களினையும் தமது அணிக்காகப் பெற்றனர்.

வி.தினேஸ்குமார் 31 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினை வீழ்த்தினார்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, சென். ஜோன்ஸ் கல்லூரி அணியினை இரண்டாம் இன்னிங்ஸிக்காக மீண்டும் துடுப்பாடப் பணித்தது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் 20 ஓவர்களில் 4 விக்கெட்டினை இழந்து 43 ஓட்டங்களினைப் பெற்றனர்.

பி.நேசவர்மன் ஆட்டம் இழக்காமல் 15 ஓட்டங்களையும் கே.ஜனுஷன் 15 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

ஜே.சி.கொலின் 15ஓட்டங்களினைக் கொடுத்து 3 விக்கெட்டினை வீழ்த்தினார். இதனால், போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்த போதும் முதல் இன்னிங்ஸில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றதால் அந்த அணிக்கு வெற்றி அளிக்கப்பட்டது. (3-190)

# மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவு



செ.றாஜிஸ்ரன்

யாழ்ப்பாணம்,ஜூன்27

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வன்மைப்போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி 3 முதல் இடங்களைப் பெற்றது.

செ.றாஜிஸ்ரன் 21 வயதுப் பிரிவில் 5000 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலாவது இடத்தையும் - நி.றொசானி 19 வயதுப்பிரிவில் 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில முதலாவது இடத்தையும் இதே பிரிவில் நீளம்பாய்தல் போட்டியில் முதலாவது இடத்தினையும் பெற்றுள்ளனர்.



நி.றொசானி

இவர்கள் இருவரும் மாகாணமட்டப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர். (3-190)

# ஆழியவளை, உடுத்துறையில் விளையாட்டு மைதானம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்27

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிக்கும் முகமாக ஆழியவளை, உடுத்துறை ஆகிய இடங்களில் இரண்டு விளையாட்டு மைதானங்கள் அமைத்துத் திறக்கப்பட்டுள்ளன.

இளையோர் செயற்பாட்டு நிறுவனமும் சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்த செயற்திட்டத்தின் கீழ் இந்த மைதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

உடுத்துறை நலன்புரிநிலையத்திற்கான விளையாட்டு மைதான திறப்புவிழாவின்போது பொதுச்சுடரை நலன்புரி நிலையத் தலைவர் யோகநாதன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மைதானத்தின் பெயர்ப்பலகையை கிராமசேவையாளர் வ.தவராசா திரைநீக்கம் செய்துவைக்க மைதானத்தை விளையாட்டு ஆலோசகர் என். நாகேஸ்வரன் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

தொடர்ந்து சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களை இளையோர் செயற்பாட்டு நிறுவன வடமராட்சி கிழக்கு இணைப்பாளர் இ.மதி வழங்கினார்.

ஆழியவளை நலன்புரிநிலையச் சிறார்களுக்காக அமைக்கப்பட்ட மைதானத்தைக் கையளிக்கும் நிகழ்வின்போது பொதுச்சுடரை நலன்புரிநிலையத் தலைவர் நல்லையா ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மைதானப் பெயர்ப்பலகையை இளையோர் செயற்பாட்டு நிறுவன வடமராட்சி இணைப்பாளர் இ.மதி திரைநீக்கம் செய்து வைக்க, மைதானத்தை நலன்புரிநிலைய மேலாளர் மணிமாறன் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

ஆழியவளை நலன்புரி நிலையச் சிறார்களுக்கான விளையாட்டு உபகரணங்களை விளையாட்டு ஆலோசகர் எஸ்.அர்சுணன் வழங்கினார். (3-203)










உடுத்துறை நலன்புரிநிலையத்திற்கான விளையாட்டு மைதானத்தின் பெயர்ப்பலகையினை கிராமசேவையாளர் வ.தவராசா திரைநீக்கம் செய்து வைப்பதையும் மைதானத்தை விளையாட்டு ஆலோசகர் என்.நாகேஸ்வரன் நாடாவெட்டித் திறந்துவைப்பதையும் முதலிருபடங்களிலும் -

உடுத்துறை நலன்புரிநிலையச் சிறார்கள் விளையாட்டு உபகரணங்களுடன் இருப்பதை அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம். (3-203)

# மரண அறிவித்தல்

## திருமதி
## மாருதப்புரவீகவல்லி செல்லையா

குரு வீதி, பழை, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் பிள்ளையார் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாருதப்புரவீகவல்லி செல்லையா 25.06.2005 சனிக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் மாவிட்டபுரம் காலஞ்சென்ற முருகேசு செல்லையா அவர்களின் அன்பு மனைவியும் ஞானேஸ்வரி பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற அதிபர், சைவமங்கையர் கழகம்), மங்கையர்க்கரசி முதலியார், பத்மாவதி (சம்பந்தன் கிளினிக்), இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், மல்லாகம் மகாவித்தியாலயம்), பாலகிருஷ்ணன் (முன்னாள் உத்தியோகத்தர், இ.போ.ச, தெகிவளை நிரோ உரிமையாளர்) ஆகியோரின் அருமைத் தாயாரும் பாலச்சந்திரன் (முன்னாள் பொது முகாமையாளர், வீரகேசரி), கட்டுடையைச் சேர்ந்த சி.பொ.வ.க. முதலியார் (முன்னாள் தலைவர், பட்டினசபை மானிப்பாய்), சித்திரா பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம் திடவீரசிங்கம், சேனாதிராஜா (Deputy Director of Finance) மற்றும் திருமதி பரமேஸ்வரி செல்வரட்ணம் (உரிமையாளர், சம்பந்தன் கிளினிக்) ஆகியோரின் அன்புச் சகோதரியும சிந்துஜா (சிலிங்கோ), லாவண்யா (ஜனசக்தி இன்சூரன்ஸ்), நிரோஷன (பல்கலைக்கழகம், பேராதனை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 5/3, பிள்ளையார் வீதி, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலியிலுள்ள அவரது தற்போதைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5/3 பிள்ளையார் வீதி,*
*தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.*
**T.P.222 5089**

தகவல்:
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(36998)(39-11-14-42)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்,

கடந்த 31-05-2005 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த

திருமதி **மாணிக்கம் மயில்வாகனம்**

**அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (28-06-2005) செவ்வாய்க்கிழமை தம்பாட்டி விறாட்டிமுனை தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிரியைகள் 30-06-2005 வியாழக்கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளன. ஆகவே, இந்நிகழ்வுகளிலும் பின்னர் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*நாரந்தனை வடக்கு,*
*தம்பாட்டி,*
*ஊர்காவற்றுறை.*

**க.மயில்வாகனம்**
(கணவர்),
**குடும்பத்தினர்.**

(36842)(46-11-14-42)

# ஓராண்டு திவச அழைப்பு



## அமரர் பத்மநாதன் பத்மாவதி
(தவம்)

அன்புடையீர் !

நிகழும் பார்த்திப வருடம் ஆனி மாதம் 13 ஆம் நாள் இன்று(27.06.2005) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது குடும்பத்தலைவி அமரர் **பத்மநாதன் பத்மாவதி (தவம்)** அவர்களின் ஓராண்டு திவசக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இக்கிரியைகளில் பங்குகொள்ளுவதோடு, தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தோறாந்தோட்டம்,
டச்சு வீதி, மானிப்பாய்.

**கணவர், மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(36786)(51-19-11-14-42)


# விற்பனைக்கு

ஐஸ்கிறீம் விற்பனைக்குரிய **ELF** வான், 50 அடி நீளமுடைய பந்தல், கதிரைகள், மேசைகள், தானியங்கி - ஐஸ்கிறீம் தயாரிக்கும் இயந்திரம், கொம்ரேசர், அம்பிளிபயர் (**Amplifier**) டெக் செற் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
**குலம் கிறீம் ஹவுஸ்,**
**ஆலடிச்சந்தி, மானிப்பாய்.**

(36981)
(46-42-14-11)


## வீதிகளில் கொட்டப்படும் கழிவுகளால் தொல்லை

வட்டுக்கோட்டை,ஜூன்27

வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள சிறு வீதிகளில் இரவுவேளையில் கழிவுப்பொருள்கள் கொட்டப்பட்டுவருவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. இதனால் அந்த வீதிகளூடாகப் பயணம் செய்யும் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வீடுகளில் சேரும் கழிவுப்பொருள்களைப் பொதிகளாக்கும் வீட்டு உரிமையாளர்கள் ஆள் நடமாட்டம் அற்ற இரவு வேளையில் இவ்வாறு வீதிகளில் கொட்டிவிடுகின்றனர் என்றும் -

தகரம், உடைந்த பீங்கான், பொலித்தீன் போன்ற பொருள்களே இவ்வாறு பொதி செய்யப்பட்டுக் கொட்டப்படுகின்றன என்றும் - தெரிவிக்கப்படுகிறது. (எ-161)

## உதவிப் பண அட்டை மீளாய்வு

வளலாய்,ஜூன்27

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மாதாந்த உதவிப் பணம் பெறும் குடும்பங்களின் உதவிப்பண அட்டைகளை மீளாய்வு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேச சமூக சேவை அலுவலர் வே.தபேந்திரன் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இந்த மீளாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இதுவரையில் தத்தமது உதவிப்பண அட்டைகளை மீளாய்வு செய்யாதவர்கள் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-178)

## வலி.வடக்கு ஒருங்கிணைப்பு கூட்டம்

வலி.கிழக்கு,ஜூன்27

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள திணைக்களத் தலைவர்கள் ஒன்றுகூடும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற உள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ள ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து விவசாயக் குழுக் கூட்டம் இடம் பெறும்.

இம்மாதம் 21 ஆம் திகதி நடைபெறவிருந்த இக் கூட்டம் போயா தின விடுமுறை காரணமாக நாளை வரை ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-152)

## முத்தமிழ் விழாவும் சுவர் ஓவியத் திறப்பும

அச்சுவேலி,ஜூன்27

அச்சுவேலி மத்திய கல்லூரியில் முத்தமிழ் விழாவும் சுவர் ஓவியத் திறப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன. கல்லூரி அதிபர் வே. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி.திருநாவுக்கரசு பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கல்வியியல் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர் சி. சுபசந்திரநோமியால் வரையப்பட்ட கற்றல் கற்பித்தல் சுவர் ஓவியங்களைத் திறந்து வைக்கவுள்ளார்.(எ-11)


# கணபதி ஜோதிட நிலையம்

## பண்டிட் ஐயப்ப சாஸ்திரி

**இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப்பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார்.**


ஒருமுறை சந்தியுங்கள்

தொடர்பு: SHANJAEYA REST HOUSE,
NO.5, RAKKA ROAD, JAFFNA.
**T.P.077 9173940**

(36862)(11-14-42)


# முதலாம் ஆண்டு நினைவுநாள்

| மண்ணில் வாழ | விண்ணில் சேர |
|---|---|
| 1936 | 2004 |
| 04 | 07 |
| 01 | 07 |



## அமரர் வேலுப்பிள்ளை குமாரசுவாமி

ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறாதையா எம்துயர்
கண்ணில் வழிந்த நீர்...
காயவில்லை – இன்னும்
ஓர் ஆண்டு என்ன
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
உம் உயிர் உள்ள வரை
உம் பணி தொடர்வோம் என்று கூறி
உமது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (27.06.2005) திங்கட்கிழமை முற்பகலில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஓராண்டுத் திவச நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

*கைதடி மேற்கு.*
*கைதடி.*

– **குடும்பத்தினர்.**

(36990)(42-11-14)


# வடமாகாணத்தில் முதன் முதலாக அறிமுகப்படுத்தியுள்ளோம்!



**Indoor - out door Large format Digital Printing**

## 6 அடி முதல் 300 அடி வரை

- வியாபார நிறுவனங்களுக்கான பெயர்ப்பலகைகள், பனர்கள்,
- ஆலயங்களுக்கான திரைச்சீலைகள்
- வாகனங்களுக்கான அலங்கரிப்புகள் (ஸ்ரிக்கர்)
- சினிமா திரையரங்குகளுக்கான போஸ்ரர்கள்
- திருமணப் பந்தல்களுக்கான வர்ண அலங்கரிப்புகள்
- ஸ்ரூடியோக்களுக்கான அலங்கரிப்புகள்



**Out Put media**
- Sticker paper
- Flex paper
- Hoted paper
- Backlit flim
- Photo paper
- Vinyl paper

# MOORTHY LAZER DIGITAL COLOUR LAB

Jaffna Road, Manipay.
T.P.: 021 222 2884

Stanley Road, Jaffna.
T.P.: 0714168475

# புதுக்குடியிருப்பு பகுதியில் விபத்துக்களை தடுப்பதற்கு காவல்துறை நடவடிக்கை

முல்லைத்தீவு,ஜூன்27

புதுக்குடியிருப்புப் பகுதியில் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் வகையில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் வாகனச் சாரதிகள் ஆகியோருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் புதுக்குடியிருப்பு காவல்துறையின் போக்குரத்துப் பிரிவினரால் பரவலாக நடத்தப்பட்டுவருகின்றன.

அந்த அடிப்படையில் மூங்கிலாறு பகுதியைச் சேர்ந்தவர்களுக்கான கருத்தரங்கு 'சடோ' நிறுவனத்திலும், வள்ளிபுனம் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கான கருத்தரங்கு வள்ளிபுனம் கனிஷ்ட வித்தியாலயத்திலும் இடம்பெற்றன.

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குபட்டவர்களுக்கான கருத்தரங்கு கடந்த புதன்கிழமை புதுக்குடியிருப்பு தமிழீழ வைப்பகக் கிளையில் இடம்பெற்றது. இதில் வைப்பக ஊழியர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இக் கருத்தரங்குகளில் புதுக்குடியிருப்பு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுப் பொறுப்பாளர் ரி.பிரதீப்குமார் கலந்துகொண்டு போக்குவரத்தில் ஈடுபடுவோர் அனுசரிக்கவேண்டிய வீதி நடைமுறைகள் மற்றும் வீதி விபத்துக்களைத் தடுப்பதற்குரிய வழிமுறைகள் பற்றியும் விளக்கினார்.

இதேவேளை, இப்பிரதேசங்களில் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் வகையில் புதுக்குடியிருப்புப் பிரதேச காவல்துறையின் போக்குவரத்துப்பிரிவினர் தீவிர ரோந்துப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் விசுவமடுச் சந்தியில் இருந்து முல்லைத்தீவுச் சந்தி வரை மோட்டார் சைக்கிளில் ரோந்துப்பணியில் ஈடுபடும் போக்குவரத்துப் பிரிவினர் வேகக் கட்டுப்பாட்டை மீறுவோரிடம் தண்டப்பணம் அறவிட்டு வருகின்றனர்.

அத்துடன், விபத்து இடம்பெறும் இடங்களுக்கு விரைந்துசெல்லும் காவல்துறையின் போக்குவரத்துப்பிரிவினர், விபத்துடன் சம்பந்தப்பட்ட வாகனத்தையும் சாரதியையும் கைது செய்து உடனடியாக முல்லை. மாவட்ட தமிழீழ நீதிமன்றத்தில் முன்னிறுத்தி வருகின்றனர்.

அண்மைக்காலமாகப் புதுக்குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்ற விபத்துக்களில் சிலர் பலியானதுடன், பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். கடந்த 2ஆம் திகதி புதுக்குடியிருப்புச் சந்தியில் இடம்பெற்ற பார ஊர்தி வீதியால் துவிச்சக்கரவண்டியில் சென்ற குடும்

## சுகாதார அதிகாரி பணிமனை நாளைமறுதினம் திறப்பு

புதுக்குடியிருப்பு,ஜூன்27

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

வைத்திய கலாநிதி து.வி.ஜெயக்குலராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.குமரவேற்பிள்ளை, முல்லை. மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரும்-

சிறப்பு விருந்தினராக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் கௌரவ விருந்தினராகக் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசையும் கலந்துகொள்ளவுள்ளனர்.(த-353-203)

## மார்புநோய்ச் சிகிச்சை

புதுக்குடியிருப்பு,ஜூன்27

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நாளை நடைபெறவிருந்த மார்புநோய்ச் சிகிச்சை எதிர்வரும் 30ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டிருப்பதாக மாவட்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர் இரா.சௌமியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இருந்து வைத்திய நிபுணர்கள் இந்த மார்புநோய்ச் சிகிச்சைகளை வழங்குவர் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-353)

## முன்பள்ளிக் கட்டடங்களை அமைப்பதற்கு உதவி

ஒட்டுசுட்டான்,ஜூன்27

மாங்குளம் பகுதியில் 7 கிராமங்களுக்கு முன்பள்ளிக் கட்டடங்கள் அமைப்பதற்கு மாங்குளம் அபிவிருத்தி நிறுவனம் உதவிப்பொருள்களை வழங்கியுள்ளது.

இந்த முன்பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் 40 பாக் சிமெந்து, 40தகரங்கள் மற்றும் ஆணிகள், றீப்பைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

கரிபட்டமுறிப்பு, ஒலுமடு, அம்பகாமம், புலுமிச்சினாதிகுளம், பணிக்கன்குளம், திருமுறிகண்டி, தச்சடம்பன் ஆகிய கிராமங்களில் இந்த முன்பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த முன்பள்ளிகளின் கட்டடத்துக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் நிதியுதவி வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (த-341)



முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்விச்சுற்றுலாவுக்கான சகல உதவிகளையும் வழங்கிய 'சீற்' நிறுவனத்தினருக்கு நன்றி தெரிவித்து பாடசாலை சார்பில் நினைவுப் பரிசு ஒன்று வழங்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எம்.ராஜ்குமார் அந்த நினைவுப்பரிசை வழங்க அதனை முல்லைத்தீவு மாவட்ட 'சீற்' நிறுவனத் திட்டப் பணிப்பாளர் என்.நிதர்சன் பெற்றுக்கொள்கிறார். (த-416)

## உப்பு உற்பத்தி நிறுவனத்தில் 30ஆம் திகதி விடுதி திறப்பு

கிளிநொச்சி,ஜூன்27

ஜி.ரி.இசற் நிறுவனத்தின் நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தால் உப்பு உற்பத்தி நிறுவனத்தில் அமைக்கப்பட்ட பெண்கள் விடுதி எதிர்வரும் 30ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு பொருண்மிய மதியுரையகத்தினர் அழைப்பு விடுத்திருக்கின்றனர்.(த-305)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு புறொஜெக்டர் அன்பளிப்பு

கிளிநொச்சி,ஜூன்27

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசலைக்கு புறொஜெக்டர் (Projector) ஒன்று வழங்கப்படவுள்ளது.

கடந்த 2ஆம் திகதி புறொஜெக்டர் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. வைத்திய கலாநிதி சதானந்தன் மற்றும் வைத்திய கலாநிதி பிறைட்ரன் ஆகியோர் இதனைப் பெற்றுக்கொண்டனர். (த-305)

## கொலைக்குற்றவாளிகள் ஐவருக்கு 25 வருட கடூழியச் சிறைத்தண்டனை

### தமிழீழ மேல் நீதிமன்றம் தீர்ப்பு

முல்லைத்தீவு,ஜூன்27

2002ஆம் ஆண்டு ஒட்டுசுட்டான் கற்சிலை மடுப்பகுதியில் வைத்து யாழ். பல்கலைக்கழக மாணவனொருவனைக் கொலை செய்தார்கள் என்ற குற்றஞ்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட ஐவருக்கு தமிழீழ மேல் நீதிமன்றத்தினால் 25 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவனான ஜெயசீலன் ஜெயரூபன் என்பவர் ஒட்டுசுட்டான் கற்சிலைமடுவில் 2002ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டார். இச் சம்பவம் தொடர்பாக அவ்வூரைச்சேர்ந்த 5 சந்தேக நபர்கள் புதுக்குடியிருப்பு காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்களுக்கெதிராக 2002ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி முல்லை மாவட்ட தமிழீழ நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பின்னர் இது தொடர்பான வழக்கு அதே ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் திகதி முல்லை. மாவட்ட மேல் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டது. அங்கு விசாரணைகள் இடம்பெற்றுவந்தன.

இவ்வழக்குத் தொடர்பான இறுதிக்கட்ட விசாரணைகள் கடந்த 21ஆம் திகதி புதன்கிழமை மேல் நீதிமன்ற நீதியரசரான திருமதி கலையரசி முன்னிலையில் இடம்பெற்றன.

விசாரணைகளின் இறுதியில் சம்பந்தப்பட்ட ஐவரையும் குற்றவாளிகளாக இனம் கண்ட நீதியரசர் தமிழீழ ஒறுப்புச்சட்டம் பிரிவு 208இன் கீழும் 226பிரிவின் கீழும் அவர்களுக்கு 25வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

இறந்தவரது குடும்பத்திற்கு இழப்பீடாக குற்றவாளிகள் ஐவரும் தலா 50ஆயிரம் ரூபாவும் வழங்க குற்றப்பணமாகதலா 5ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும் எனவும் நீதியரசர் தீர்ப்பளித்தார். (த-410-353)

# காணி உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை

ஒட்டுசுட்டான்,ஜூன் 27

திருகோணமலைக் காணித்திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட காணி ஆணையாளர் அடங்கிய துரித செயலணிக்குழுவினரால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் 9 கிராம சேவை அலுவலர் பிரிவில் நடத்தப்பட்ட காணிக கச்சேரியின்படி 351 விண்ணப்பங்களுக்கு உத்தரவுப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் சுபாஜினி கந்தையா தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் சுமார் ஆயிரம் வரையிலான காணிகளுக்கு நீண்டகாலமாக உத்தரவுப்பத்திரம் இல்லாதிருந்தது. இதனால் இதனைக் கருத்திற் கொண்டு அண்மையில் அங்கு காணிக்கச்சேரி ஒன்று நடத்தபட்டது. அப்போது காணிச் செயலணிக் குழுவினரால் காணிகள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டன. உரிமைப் பத்திரங்களைப் பெறுவதற்கு 924 விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தார். அவற்றில் 351 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு உத்தரவுப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. துரித காணி செயலணிக் குழுவினரால் தொடர்ந்து இச்சேவை வழங்கப்பட்டு வருகிறது.

(த-341)

## குளத்தில் மூழ்கி மாணவன் மரணம்

புதுக்குடியிருப்பு,ஜூன்27

உடையார்கட்டுக் குளத்தில் குளிக்கச் சென்ற மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி பரிதாபகரமாக மரணமானார்.

இந்தச் சம்பவம் கடந்த 24ஆம் திகதி மாலை நடைபெற்றது.

மாணவர்களில் சிலர் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு குளத்தில் குளிக்கச் சென்றனர். அவர்களில் காரளசிங்கரன் சசிந்தன் என்ற மாணவனே மரணமானார்.

விசுவமடுப் பிரதேச காவல்துறையினர் மேற்படி சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(த-353)






சாரணர் வாரத்தை முன்னிட்டு வட்டக்கச்சி மகாவித்தியாலய சாரணர்கள் கிராமங்களில் உள்ள வீடுகள், அலுவலகங்கள், பொது இடங்களில் துப்புரவுப் பணியினை மேற்கொண்டனர்.

மூன்றுபேர் அடங்கிய குழுக்களாகப் பிரிந்து இவர்கள் இந்த துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.

வட்டக்கச்சிப் பகுதியில் உள்ள அலுவலகம் ஒன்றின் மாணவர்கள் துப்புரவு செய்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

*(படம்: பரந்தன் செய்தியாளர்).*

# படகுகள் கட்டுமான நிலையம் முல்லைத்தீவில் திறந்துவைப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னரான துரித புனரமைப்புத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவில் அமைக்கப்பட்ட படகுகள் கட்டுமான நிலையம் கடந்த 21ஆம் திகதி (புதன்கிழமை) சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக புனரமைப்புக் குழுத்தலைவர் எஸ்.சிவனடியார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஈகச்சுடரினை பங்குத் தந்தை திருமாறன், கடற்புலிகளின் முல்லை. மாவட்ட அரசியல்த்துறைப் பொறுப்பாளர் ரங்கன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக்கொடியை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தனும், தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியை முல்லை.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் மூர்த்தியும் ஏற்றினர்.

படகுகள் கட்டுமான நிலையத்தின் பெயர்ப பலகையை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் திரைநீக்கம் செய்து வைத்தார். கட்டுமானநிலைய அலுவலகத்தினை எம்.எம்.எஸ்.நிறுவனத்தின் அமெரிக்க நாட்டுப் பிரதிநிதி சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்.

மீனவர்களுக்கான இயந்திரப்படகுகள் மற்றும் ஒருதொகுதி மீன்பிடி உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சோ.தங்கன், முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் எஸ்.மரியராசா உட்பட பலர் சிறப்புரையாற்றினர். (த-410-353)

## உளநல மருத்துவமுகாம்

புதுக்குடியிருப்பு,ஜூன்27

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் உளநல மருத்துவமுகாம் நாளைமறுதினம் புதன்கிழமை முறபகல் 10 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் தயா சோமசுந்தரத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இம்முகாமில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களும் உளநல சிகிச்சை தேவைப்படுவோரும் பங்குபற்றி பயன் பெறலாம் என்று முல்லைத்தீவு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி து.வி.ஜெயக்குமார் அறிவித்துள்ளார். (3-353-202)

# திருநெல்வேலி குடியேற்றத்திட்டத்தில் மக்களின் வாயில்களை நாடிச் சேவை

## நடமாடும் சேவையால் மக்கள் குறைகள் களைவு

செய்திக் கட்டுரை

**நவம்**

இன்றும் கூட பல மக்கள் தமக்கான தேவைகள் விடயத்தில் ஏற்படுத்தும் சிறு சிக்கல்களை எவ்வாறு தீர்பதென்பதை அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள். அதிலும் குறிப்பாக இந்த விடயத்தை இந்த இடத்திற்குச் செல்வதன் மூலம் தீர்க்க முடியும் என்பதைக் கூட அறியாமல் வாழ்கின்றார்கள்.



சிலர் விடயங்களை அறிந்துள்ள போதிலும் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று காரிய மாற்றுவது பெரும் சிக்கலாகவும் இருக்கின்றது.

இவ்வாறான மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கோடு பிரதேசங்கள் தோறும் பல்வேறு நடமாடும் சேவைகள் நடத்தப்படுகின்றன.

திருநெல்வேலிப் பாற்பண்ணைப் பகுதி மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுககுத் தீர்வுகாணும் வகையில் யாழ்.நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையும் இணைந்து அண்மையில் நடமாடும் சேவை ஒன்றை நடத்தியிருந்தனர்.

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இச்சேவை, மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் ஒரு களமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நடமாடும் முகாமில் மக்களுடனான சந்திப்புக்கள் இடம்பெற்றன. சந்திப்புக்களின் மூலம் மக்களின் அநேக பிரச்சினைகள் கேட்டறியப்பட்டன.

காணி, தேசிய அடையாள அட்டைகள், பிறப்பு, இறப்புப் பதிவுகள், சமூக சேவை, இடம்பெயர்ந்தோர் பிரச்சினைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் கேட்டறியப்பட்டு தீர்வுகள் எட்டப்பட்டன.

குறிப்பாக அரச காணிகளில் இருப்பவர்களின் காணிஉரிமை தொடர்பான பிரச்சினைகளுக்கும் தனியார் காணிகளுக்கான உரிமைப்பிரச்சினைகளுக்கும் ஆராய்வுகள் மேற்கொள்ளப்பட்டுத் தீர்வுகள் வழங்கப்பட்டன.

இந்த நடமாடும் சேவையில் யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குகொண்டு சேவையாற்றினர்.

அரசியல், சமூக, பொருளாதார கட்டுமானங்களை மேம்படுத்தி மக்களின் வாழ்க்கைததரத்தை விருத்தி செய்யும் முகமாக மேற்கொளளப்பட்ட இந்த நடமாடும் சேவை மக்களுக்குப் பெரும் பயனை வழங்கியது.

வடமைப்பு தொடர்பான பிரச்சினைகளும் மக்களின் குறைகளும் நேரில் கேட்டறியப்பட்டன. அதன்மூலம் இப்பகுதியில் அகதிகளுக்கான நிதியுதவியுடன் 40 வீடுகளைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் சுமார் 13 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை அப்பகுதி மக்களுக்கு வழங்கினர்.

மருத்துவ சேவைகளை யாழ்.பல்கலைக்கழக மருத்துவர்களும், தியாகி திலீபன் மருத்துவ சேவைப் பிரிவினரும் தமிழீழ சுகாதார சேவையினரும் இணைந்து வழங்கினர்.

பல்வேறு நோய்களும் பரிசோதிக்கப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டன. கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு தேவையானவர்களுக்கு கொக்குவில் லயன்ஸ் கழகத்தினர் கண்ணாடிகளை வழங்கினர்.

**நடமாடும் சுகாதார சேவை**

மேற்படி பிரதேச மக்களின் சுகாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு நடமாடும் சுகாதாரச் சேவையும் நடத்தப்பட்டது.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் அப்பகுதியில் வீடு வீடாகச் சென்று சுகாதார விழிப்புணர்வுப் பிரசாரங்களை நடத்தியதுடன், சென்ற இடங்களில் சுகாதாரச் சீர்கேடு காணப்பட்டால் அதை நிவர்த்தி செய்யும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

அதில் ஒரு பகுதியாக கிணறுகளுக்கு குளோரின் போட்டனர். அத்துடன், சுகாதார போசாக்குக் கருத்தரங்குகள், பிள்ளைவளர்ப்பு, கர்ப்பிணிகள், குழந்தைகள், சிறுவர் உடல் நல விருத்தி போன்ற விடயங்கள் தொடர்பாகக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன.

தொடர்ந்து 3 நாள்களாக இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன், தேசிய எழுச்சிப் பேரவையின் சார்பில் மா.இளம்பிறையன், யாழ்.பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன், நல்லூர் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் பூமகள், நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் ஆகியோா கலந்து கொண்டதுடன் பணிகளைக் கண்காணித்தும் வந்தனர்.

போர் மற்றும் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழும் எமது மக்களுக்கு இவ்வாறான நடமாடும் சேவை கூடிய பயனைத் தரும். ★


**தேவை**

எமது நிறுவனத்துக்கு
* நிர்வாக முகாமையாளர் (வயது 35-50)
* விற்பனைப் பிரதிநிதி
* உதவியாளர்கள்

ஆகியோர் தேவைப்படுகின்றனர்.
நேரில்வரவும்
தொடர்பு:
**மூர்த்தி கலர்லாப்**
**மானிப்பாய்.**
(சி-43680) (39-15-17)

**பதவி வெற்றிடம்**

எமது நிறுவனத்துக்கு பின்வரும் பதவிகளுக்குப் பணியாளர்கள் தேவை.
* முகாமையாளர் (ஆண்/பெண்)
* காசாளர் (பெண்) கணனியறிவுடையவர்
* விற்பனையாளர் (ஆண்/பெண்)
* பொருள்களைப் பொதிசெய்பவர்கள் (Packing) (பெண்)
* சிற்றூழியர்கள்

தகைமையுடையோர் சுயவிவரக் கோவையுடன் (Biodata) முற்பகல் 11 மணிமுதல் மாலை 3 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் நேரில் சமுகம்தரவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**JEEVA Food Stuff Supplier**
ஜீவா (f) பூட் ஸ்ரவ் சப்ளையர்
43/4, பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.
T.P. :0714168410, 0773102952
(37001) (39-15-17)

**இன்னும் நீங்கள் தாமதிக்கின்றீர்களா!**

A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபலபல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான Visaக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visaக்களையும் உறுதிசெய்கின்றது.



சி. றமணன்
யாழ்ப்பாணம்.

G.C.E உயர்தர பரீட்சையை முடித்ததும் அடுத்து என்ன செய்வதென்று அறியாது குழம்பிய நிலையில் இருந்த போது IIS நிறுவனம் Edexcel இன் HND கற்கைநெறியினை எமது சொந்த மண்ணிலேயே வழங்க முன்வந்திருந்தது இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி என்னையும் HND கற்கைநெறியில் இணைத்துக்கொண்டேன். சிறுபராயம் முதல் இருந்து வந்த கணனிக்கல்வி தொடர்பான எனது ஆவல் A/L கல்வியை முடித்த வேளையில் ஓர் பூரண கற்கைநெறியைத் தேர்ந்தெடுத்து கணனித்துறையில் ஓர் வல்லுனராக வர வேண்டும் என்ற நிலையில் வளர்ச்சி கண்டிருந்தது என் ஆவலையும் நான் கொண்டிருந்த இலக்கையும் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் Edexcel இன் HND கற்கை நெறி அமைந்திருந்தது இரண்டு வருடங்களிற்கு சமமான பல்கலைக்கழகக் கற்கைநெறியினை முடித்துத் தற்பொழுது மூன்றாம் வருடத்தினைத் தொடர்வதற்கு பிரித்தானியாவில் உள்ள Middlesex பல்கலைக்கழகத்தில் கல்வியினைத் தொடர்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த IIS நிறுவனத்திற்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



வை. தர்மிந்
சங்கானை

2002ம் ஆண்டு A/L பரீட்சைக்குத் தோற்றியபின்பு எனக்குப் பல்கலைக்கழக அனுமதி கைநழுவிப்போன நிலையில் IIS நிறுவனத்தினால் நடத்தப்படும் London Edexcel நிறுவனத்தின் HND கற்கை நெறியைப்பற்றி அறிந்தேன். இக்கற்கை நெறியானது குறுகிய காலத்தில் ஓர் கணனிப் பட்டதாரியாகக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகின்றது. இக்கற்கை நெறியினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து கொள்ளுமிடத்து இறுதியாண்டு பட்டப்படிப்பினைச் சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றிலோ அல்லது கொழும்பிலுள்ள SLIIT நிறுவனத்திலோ மேற்கொள்ள ஏதுவாக இருப்பது இக் கற்கை நெறியின் சிறப்பம்சமாகும். HND கற்கைநெறியை எமது சொந்தமண்ணிலேயே மேற்கொள்ள ஓர் வாய்ப்பு எமக்கு கிடைத்தது மிக மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

**BTEC HND**
World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally

**B.Sc (Hons) / BEng (Hons)**
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

**BTEC HND***
Computing / Software Engineering / Business Information Technology (1 ½ years)

**GCE A/L**
with 2 Subjects

IIS நிறுவனம் தற்போது மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது

edexcel INTERNATIONAL
Approved Training Centre

**IIS CITY CAMPUS**
# 181, Navalar Road, Jaffna.
TP No. : 021 222 8060 / 021 222 2201

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி இராஜரஞ்சிதம் சந்திரசேகரம் அவர்களின் அன்புத் தந்தையார்

## கனகசபை கணேசன்

(ஓய்வுபெற்ற தபால் தரம் பிரிப்பாளர், சாவகச்சேரி தபால் நிலையம்) அவர்களின் மரணச்செய்தி கேட்டு எமது பாடசாலைச் சமூகம் துயரமடைந்துள்ளது. அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம், சாவகச்சேரி.* (37019)(29-12-34-18)
அதிபர், ஆசிரியர் மாணவர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## நடராசா சறோஜினிதேவி



ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சறோஜினிதேவி 22.06.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் சுந்தரம் - சிவக்கொழுந்து தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் கருணாகரன் (சுவிஸ்), கிருபாகரன், பிரபாகரன் (சுவிஸ்), பாஸ்கரன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நவரசதேவி (சுவிஸ்), ராசலட்சுமி, தேவி (சுவிஸ்), விக்கினேஸ்வரி (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ரஜனி (கனடா), நளினி (கனடா), தாரணி (லண்டன்), ஜெகநாத் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுபாசினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற மாஜவன், ஜஸ்ரின்சுரேஸ் (கனடா), ஜெய்ஷன் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமியாரும் விஷ்ணு, மதுன், அருன், ஸ்ரெபானி, ஸ்ரெலானி, ஜெனிபர், ஜெயசூரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.06.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஊரெழு மேற்கு, சுன்னாகம்.* (37024)(29-18-12-34)
சு.சிவக்கொழுந்து (தாய்), சு.கிருபாகரன் (சகோதரன்).

## நடராசா திருச்செல்வர்

யாழ்ப்பாணம், 241, எவ் சில்வர் மாளிகை, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா திருச்செல்வர் அவர்கள் நேற்று (26.06.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் பத்மராஜன், சுரேந்திரன், யசோ ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*மானிப்பாய்.*
ஆ். செல்வநாயகம் (மைத்துனர் -சின்னராசா) (37017)(29-18-12-34)

## நாகலிங்கம் சபாரத்தினம்



மயிலிட்டி தெற்கை வசிப்பிடமாகவும் சங்குவேலி வடக்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சபாரத்தினம் நேற்று (26.06.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் கமலகவி, சிவகவி, காலஞ்சென்ற புஸ்பகவி மற்றும் இராசலட்சுமி, புஸ்பரதி, இராசகவி, புவனேஸ்வரி, தேவராணி பாலஸ்கந்தன், தங்கமலர், லிங்கேஸ்வரன், கவிதா, விஜித்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகலிங்கம் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் கனகராசா, சிவபாக்கியம், காலஞ்சென்ற தம்பிராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காந்தன், சிவகுமார், நாகராசா, ஞானசேகரன், சிறீதரன், கனகலிங்கம், கேதீஸ்வரி, சிவமுருகதாஸ், காசிஆனந்தன், ரவிக்குமார், சந்திரன், ஜெயானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் விக்கினேஸ்வரி, கௌசல்யா, சிவகரன், சர்மினி ஆகியோரின் பெரிய தந்தையும் பிரபாலினி, தமிழினி, குமுதினி, பிரணவன், கவிதரன், நிருபா, தனோஷன், துஷாந்தினி, லாஜினி, துவாரகா, கிஷாந்தன், கணுஸ்ணன், ஜெதுஷா, வத்சலா, புஷாந்தினி, தனோஷன், கிருஷ்ணவாணன், டனிததன், சரன்யா, மன்மதன், கபிலன், பிரஷாந்தினி, ஜீவிதா, சர்மிளா, செந்தூர், சண்ஜீ, சண்ஜீவன், அனித்தா, கயாணன், சாருகா, கறீஸ், றதீஸ்வரன், சுதாகரன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் டிலாஜினி, அனோஷா, தர்சிகா ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2005) திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.* (37011)(29-18-12-34)
பாலஸ்கந்தன் (மகன் - சிவா)

## செல்லத்துரை குமாரசாமி (கனகராசா)



கொக்குவில் மேற்கு, கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை குமாரசாமி 23.06.2005 அன்று காலமானார்.

அன்னார் சுசிலாதேவியின் அன்புக் கணவரும் குமுதினி, குமுதாஸ்சினி, குணராஜா (அமரர்), கிருஷ்ணராஜா, ரஜேஸ்கண்ணா, வினோதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானசேகரம், புவனேஸ்வரி, நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரஜேஸ்வரன், திலககாந்தன், நாகராஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அஜித்தா, றிஷ்னா, ஐங்கரன், தமிழினி, நக்கீரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2005) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (37013)(29-18-12-34)
குடும்பத்தினர்.

# தங்கச்சங்கிலி அபகரிப்பு

வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்தவர்கள் அவரின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு தலைமறைவாகினர்.

இந்தத் துணிகரச் சம்பவம் நீர்வேலி, கரந்தன் பகுதியில் அண்மையில இடம்பெற்றுள்ளது.

இதேவேளை -

அதேதினம் நீர்வேலியில் வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணின் கழுத்தில இருந்த தங்கச் சங்கிலியை அறுப்பதற்கு மோட்டார்சைக்கிளில் வந்தவாகள முயற்சித்தனர் என்றும்-

எனினும், அது கைகூடாததையடுத்து ஓடித் தப்பிவிட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் - நீர்வேலி கோப்பாய் கரந்தன் பகுதிகளில் முகம் தெரியாதவாறு கறுப்புநிறக் கண்ணாடி பொருத்தப்பட்ட தலைககவசம் (ஹெல்மட்) அணிந்து மோட்டார் சைக்கிளில் சென்று வீதியால் செல்லும் பெண்களிடம் தங்கநகைகளை அபகரித்துச் செலவோரின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-17)


## திருமணக் கார் வாடகைக்கு

(குளிரூட்டியது)



★ திருமண வைபவங்கள்
★விசேட வைபவங்கள்
★சுற்றுலாக்கள்

முதலான அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய குளிரூட்டிய நவீன கார் வாடகைக்குண்டு. வெள்ளை நிறக் கார்களுக்கு முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும். (37012)(29-12-34-18)

சிவா வீடியோ லைபிரறி

முடமாவடி, திருநெல்வேலி. (பூங்கனிச் சோலை அருகில்).


# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன ஆங்கில ஆசிரியை
செ.இராஜேஸ்வரி
அவர்களின் தாயார்
திருமதி

## செல்லையா மாருதப்புரவீகவல்லி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர் ஆளணியினர். (37009)(29-12-34-18)

# மரண அறிவித்தல்

## கனகசபை கணேசன்

(இளைப்பாறிய தபால் உத்தியோகத்தர்)

சாவகச்சேரி வடக்கு, மடத்தடி மேற்கு வீதியைச் சேர்ந்த கனகசபை கணேசன் நேற்று (26.06.2005) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இராஜபூபதியின் அன்புக் கணவரும் இராஜரஞ்சிதம் (ஆசிரியை, யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்), இராஜஜீவி (ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவரத்தினம், சண்முகலிங்கம் ஆகியோரின் சகோதரனும் சந்திரசேகரம், சுந்தரலிங்கம் (உப அலுவலக உத்தியோகத்தர், சரசாலை) ஆகியோரின் மாமனாரும் குகரதன், பிரியந்தி (யா/சாவ. இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள்), தனுஷிகா, பிறின்ஷிகா, குகபரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.06.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அல்லாரை கொற்புலவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஜீவகடாட்சம் மடத்தடி மேற்கு வீதி, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.* (37025)(29-12-34-18)
குடும்பத்தினர்.


## ராஜா யாழ்ப்பாணம்

ரஜனிகாந்த், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல் நடித்த

சந்திரமுகி (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

(C41381)(12-17)

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

விக்ராந், லக்ஷ்மிராய், வடிவேலு நடித்த

கற்க கசடற (ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00. 3.00. 6.00 (பு.நே.)

## நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது. ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

வெள்ளித் திரையில் பத்ம ஸ்ரீ பாடகர் ஹரிகரன் அறிமுகம், குஷ்பூ, ரியாஸ்கான் நடித்த

பவர் OF WOMAN (ரீல்ஸ்)

கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)

(சி-43363)


# கண்ணீர் அஞ்சலி



எங்கள் அன்புத் தெய்வம்

## செல்லையா கந்தசாமி

(வேலணை, வங்களாவடிச் சந்தி, உரிமையாளர் குமரன் கூல்பார்)

அவரின் மறைவினால் நாம் செய்வதறியாது கதிகலங்கி நிற்கின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அவரின் ஆத்மா சாந்தியடைய வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஜேர்மனி. (37020)(29-12-34-18)
சுஷீலன், லோகநாயகி குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது அரச முதியோர் இல்லப் பணியாளர்
திரு.இ.பரமநாதன் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி இராசையா இராசம்மா

அவர்கள் அமரத்துவமடைந்த செய்திகேட்டு துயரம் அடைகின்றோம். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அரச முதியோர் இல்லம், கைதடி. (37018)(29-12-34-18)
அத்தியட்சகர், உத்தியோகத்தர், ஊழியர்கள்.

# கண்ணீர் அஞ்சலி



எமது மீசாலை கைத்தொழில் வணிகர் மன்ற ஆரம்ப உறுப்பினரும் சிறந்த சேவையாளருமான
அமரர்

## கனகசபை கணேசன்

அவர்கள் 26.06.2005 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த செய்திகேட்டு நாம் பெரும் துயரம் அடைவதுடன், அன்னாரின் குடும்பத்தவரின் துன்பத்திலும் பங்குகொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

க.வேதநாயகம் தலைவர். (37021)(29-12-34-18)
கைத்தொழில் வணிகர் மன்றம், மீசாலை.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஜெயந்திமாலா சிவரத்தினராசா

(தென்மராட்சி மேற்கு பல நோ.கூ.சங்க. லிகிதர்)



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயந்திமாலா சிவரத்தினராசா நேற்று (26.06.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தேவராசா - செல்லம்மா ஆகியோரின் அன்பு மகளும் சிவரத்தினராசாவின் (கந்தரப்பா) அன்பு மனைவியும் லிதாபரன், ரனுசியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி), தாட்சாயினி (முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மாணவி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சியாமளா (ஜேர்மனி), கோகிலராஜ் (நோர்வே), ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி வசந்தினி - கோகிலராஜ், சிவலிங்கம், மயில்வாகனம், அகிலாண்டம், பொன்னம்மா, யோகேஸ்வரி, தங்கம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கைதடி மேற்கு, கைதடி.* (37016)(29-12-34-18)
கணவர் சிவரத்தினராசா (கந்தரப்பா).

## திருமதி கலைவாணி பாலேந்திரராஜா



நல்லூரைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலைவாணி பாலேந்திரராஜா அவர்கள் 25.06.2005 சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரை (முன்னாள் மின் அத்தியட்சகர், யாழ். மாநகரசபை) - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பாலேந்திரராஜாவின் அன்பு மனைவியும் கங்கா, பிரணவன், சோபிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் காந்திமதி (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), ஸ்ரீசிற்சபேசன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் குருநாதன் (மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்.), மதிவதனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் மகிந்தனின் (யாழ். இந்துக் கல்லூரி) அன்புப் பெரியம்மாவும் மயூரன், வர்ஷினி, ஜனார்த்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இல.383/16, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.* (37015)(29-12-34-18)
வீ.பொன்னுத்துரை (தகப்பன்), அ.குருநாதன் (மைத்துனர்).

# புலிகளின் பொத்துவில் அலுவலகம் நேற்றுமாலை திடீரெனத் தாக்கப்பட்டது!

அம்பாறை, ஜூன்27

அம்பாறை மாவட்டம் பொத்துவிலில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரின் கோமாரி அலுவலகம் நேற்றுமாலை இனந் தெரியாதவர்களின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

அக்கரைப்பற்று - பொத்துவில் பிரதான வீதியில் அமைந்துள்ளது இந்த அலுவலகம். மாலை 4.30 மணியளவில் அதன் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

அடையாளம் தெரியாத மூன்று நபர்கள் திடீரென அலுவலகத்திற்குள் புகுந்து இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அச்சமயத்தில் அங்கு போராளிகள் எவரும் இருக்கவில்லை என உடும்பன் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலாகரன் தெரிவித்தார். அலுவலகத்திற்கு கடுஞ்சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

தாக்குதலை நடத்தியவர்கள் அலுவலகத்திற்குள் புகுந்து அங்கிருந்த முக்கிய ஆவணங்கள் பலவற்றை எடுத்துச் சென்றுள்ளதுடன் ஏனையவற்றைச் சேதப்படுத்திவிட்டும் சென்றுள்ளனர். கதவு, ஜன்னல்கள், அலுவலக உபகரணங்கள் என்பன அவர்களால் சேதமாக்கப்பட்டுள்ளன.

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்!

மட்டக்களப்பு நகரில் மதுபான விநியோகஸ்தர் ஒருவர் அடையாளந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டு காயமடைந்தார். அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சிங்களவாடி, வீரபத்திரர் ஆலயம் அருகில் இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் 1.15 மணியளவில் நடந்துள்ளது. தர்மராசா மகேஸ்வரன் (வயது 31) என்ற இந்நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் இருவர் அடையாளங்காணப்படாத போதும் சம்பவம் நடந்தது உயர் பாதுகாப்பு வலயமாகக் கருப்படுகின்ற பகுதி என்பது குறிப்பிடத்தக்க்து. (ஓ-ரி)

## கிழக்கில் இன்று ஹர்த்தாலுக்கு அழைப்பு

கல்முனைக்குடி, ஜூன்27

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படாததைக் கண்டித்து கிழக்கில் இன்று திங்கட்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு முஸ்லிம் அமைப்புகளின் ஒன்றியம் என்ற பெயரில் இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசைக் கண்டிப்பதும் பொதுக்கட்டமைப்பில் உடன் திருத்தங்களை மேற்கொள்வதோடு, முஸ்லிம்களை சமதரப்பாக அங்கீகரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தும் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## போராளிகள் 50 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நொச்சியிலிருந்து புறப்பட முடியாமல் சுமார் நான்கு வாரங்கள் அங்கு தங்கியிருந்த அம்பாறை மாவட்டப் போராளிகள், நேற்றுக்காலை கிளிநொச்சியிலிருந்து ஓமந்தை சென்று அங்கிருநது செங்கலடிக் கறுப்புப்பாலம் வரை இராணுவப் பாதுகாப்புடன், வாகன அணியாகச் கூட்டிச்செல்லப்பட்ட சமயமே அவர்களின் பஸ் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது எனத் தெரிகிறது.

முன்னரும் இதேபோல் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்படலாம் எனப் புலிகளுக்கு உளவுத் தகவல் கிட்டியிருந்ததால், இலங்கை இராணுவத்துடன் இவ்வாறு வாகன அணியில் செல்லும் ஒரு பயணத்தைப் புலிகள் கைவிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தங்களின் மூத்த தலைவர்களைக் கொல்வதற்கு இலங்கை அரசு படைகள் தமது துணைப் படைகளாக இயங்குவோரை இப்படிப் பயன்படுத்துகின்றன எனப் புலிகள் குற்றஞ்சுமத்துகின்றனர். (க)

## விமானசேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்திற்குள் இராஜினாமாச் செய்துவிட வேண்டும். இல்லையேல் அவரது அக்கட்சியில் இருந்தும் தாம் இராஜினாமாச் செய்துவிடுவார் எனக் காலக்கெடுவுடன்கூடிய எச்சரிக்கை ஒன்றையும் அவர் விதித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட்டபின பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி அணியில் இணைந்து சிரேஷ்ட பிரதித் தலைவராகவும் மட்டக்களப்பு மாவட்ட பிரதம அமைப்பாளராகவும் செயற்பட்டார் எம்.எல்.எம்.ஹிஸ்புல்லா.

கடந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பில் இவர் போட்டியிட்டுத் தோல்வியடைந்தபோதும, விமானப் போக்குவரத்துத் துறைகள் அமைச்சா மங்கள சமரவீரவின் சிபார்சின் பேரில் விமான சேவைகள் மற்றும் விமானநிலைய நிறுவனத் தலைவராக இவர் நியமிக்கப்பட்டார்.

"ஆழிப்பேரலையின் பின்னரான நிவாரண மற்றும் மீள்கட்டமைப்புப் பணிகளுக்கான பொதுக் கட்டமைப்பினால் முஸ்லிம்களுக்கு எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. தேசிய ஐக்கிய முன்னணி, அரசுக்கு கடைசிநேரம் வரை ஆதரவு வழங்கியபோதும் ஜனாதிபதி எம்முடன்கூட இவ்விடயம் தொடர்பாகக் கலந்துரையாடவில்லை. எமது சமுதாயம் முற்றாகவே ஓரங்கட்டப்பட்டுள்ளது. இதனை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்பதால் நான் எனது பதவியை இராஜினாமாச செய்கிறேன்" - என ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

தனது இராஜினாமாக் கடிதத்தை அமைச்சா மங்கள சமரவீரவுக்குத் தாம் அனுப்பிவைத்துள்ளா எனவும் அதன் நகலை ஜனாதிபதிக்கும தாம் அனுப்பியுள்ளார் என்றும் ஹிஸ்புல்லா தெரிவித்தார். (க)

## ஆழிப்பேரலையால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர்களின் உற்றார், உறவினர்கள் நண்பர்கள் பல்வேறு இடங்களிலிருந்தும் வந்து இந்த அஞ்சலிநிகழ்வில் கலந்துகொண்டனர்.

மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் இறந்தவர்களின் ஆத்மசாந்திவேண்டித் திருப்பலி பூசை இடம்பெற்றது.

வண.பிதா டேமியன் அடிகள் (அ.ம.தி) தலைமையில் செ.றோய்பேடின் அடிகளார் நடத்திய இத்திருப்பலியில், மக்கள் மெழுகுவர்த்திகளையும் மலர்களையும் ஏந்திநின்று கண்ணீர் பெருக பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இந்தப் பிரார்த்தனையில் படையினரும், கலந்துகொண்டு உயிரிழந்த இராணுவத்தினருக்காகவும் பொதுமக்களுக்காகவும் அஞ்சலிசெய்தனர்.

செ.றோய்பேடின் அடிகளார் தலைமையில் ஊர்வலமாக மணற்காடு சேமக்காலைக்குச் சென்ற மக்கள் அவருக்கு அங்கு உயிர்நீத்தவர்களின் சமாதிகளில், மெழுகுவர்த்திகளை ஏற்றியும் மலர்மாலைகளைச் சூட்டியும், மலர்வளையங்கள் வைத்தும் கதறி அழுத வண்ணம் தமது அஞ்சலிகளைச் செலுத்தினர்.

பேடின் அடிகளார் இறந்தவர்களின் சமாதிகள் மீது பன்னீர் தெளித்து ஆசி வழங்கினார்.

மாலையில் பொற்பதி இராயப்பர் ஆலயத்தில் பங்குத் தந்தையின் தலைமையில் நினைவுரைகளும் இடம்பெற்றன. (ஐ-ஒ-70-204)

## அரசிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது. எனினும், கட்சி ஆதரவாளர்களின் வேண்டுகோளின் பேரில் அக்கடிதத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பது தற்காலிகமாகப் பிற்போடப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக கடந்த வெள்ளியன்று அவசரமாகக்கூடிய கட்சியின் உயர்மட்டக்குழு இவ்விடயம் குறித்து பிராந்திய அமைப்பாளர்களுடனும், சிரேஷ்ட உறுப்பினர்களுடனும் கூடிப்பேசியே முடிவெடுக்க வேண்டும் எனத் தீர்மானித்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின்படி எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதலாம் திகதி சம்பந்தப்பட்டோர் கூடி ஆராய்ந்தபின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாள் நாயகமும், பிரதி அமைச்சருமான சேகு இஸ்ஸதீன் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அதேவேளை, முன்வைக்கப்பட்டுள்ள பொதுக் கட்டமைப்பின் பிராந்திய சபையின் மூன்று முஸ்லிம்களின் பிரதிநிதிகளுக்கும், உயர் சபையில் ஒரு முஸ்லிம் பரதிநிதிக்கும் இடமளிக்கப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்ட பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் அவ்விடயம் குறித்து அரைகுறைத் திருப்திநிலை காணப்படுவதாகவும் பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் கூறினார். (க)

## காரைநகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்துறையினர் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

காரைநகர் வியாவில் சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்ட முன்பள்ளி விளையாட்டு விழா நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழீழத் தேசியக கொடி ஏற்றப்பட்டது. அங்கு வந்த கடற்படையினரும், பொலீஸாரும் தமிழீழத் தேசியக் கொடியை இறக்கும்படி வற்புறுத்தினர். ஆனால், அதற்கு பொதுமக்கள் மறுத்துவிட்டனர். இறுதியில் நிகழ்ச்சி முடிவடைந்த பின்னரே உரிய சம்பிரதாயத்துடன் கொடி இறக்கப்பட்டது.

தனியார் காணி ஒன்றில் விளையாட்டு விழா இடம்பெற்றது. பொதுமக்கள் மீதான இந்த அச் சுறுத்தல் குறித்துப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

# பொதுக்கட்டமைப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதாக அமையக்கூடும் என்றும் சுட்டிக்காட்டியிருப்பதை நாம் கவனிக்கவேண்டும்.

"இதனால், இந்தப் பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டின் மூலம் இந்தியாவையும் மோசம் செய்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா.

"அவரை நம்புவார் இன்று எவருமில்லை இந்தியாவை - இலங்கை மக்களை - தனது அணியோடு கூட்டுச்சேர்ந்த கட்சிகளை - முஸ்லிம் மக்களை - எனப் பலதரப்பினரையும் அவர் ஏமாற்றிவிட்டார்.

"சந்திரிகாவில் தங்களுக்கு நம்பிக்கை இல்லவே இல்லை என்பதைப் புலிகளும் ஏற்கனவே தெரிவித்துவிட்டனர்.

"இப்படி எல்லாத் தரப்பினராலும நம்பிக்கை இழக்கப்பட்ட ஜனாதிபதி குமாரதுங்க, நாட்டுக்குத் தாம் இழைத்த பாவங்களை எதிர்கொள்ள வேண்டியவராக இருக்கிறார்.

"பொதுக்கட்டமைப்பை வரவேற்றுப் பல அறிவிப்புகள் பல்வேறு வெளிநாடுகளிலிருந்து வருகின்றன எனக் கூறப்படுகின்றது. இங்கிருந்து (இலங்கையிலிருந்து) தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் அறிக்கைகளே அங்கிருந்து ஒப்பமிடப்பட்டுத் திருப்பி அனுப்பிவைக்கப்படுகின்றன என்ற விடயமும் அதற்கான தகவல்களும் எமக்குச்சிக்கியுள்ளன.

"பிராந்திய நிதி என்ற பெயரில் பொதுக் கட்டமைப்புக்கு வெளியிலிருந்து (சர்வதேசத்திலிருந்து) வரும் நிதிக்காக அளவுக்கு மீறி அவற்றில் நாம் தங்கியிருப்போமானால் மீண்டும் வெளிநாடுகளின் காலனித்துவப் பிரதேசமாக இலங்கை மாறவேண்டிநேரும்.

"இந்தப் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் பல வெளிநாட்டு முகவர் அமைப்புகளின் தலையீடு உள்ளது. இது எமது நாட்டின் இறைமையைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. இத்தகைய உள்நோக்கம் கொண்ட வெளிச்சக்திகளுக்கு எதிராக நாம் உறுதியாகப் போராடுவோம்.

"பொதுக்கட்டமைப்புத் திட்டம் முழுமையாகக கைவிடப்படும் வரை ஜனநாயக முறையில் - அமைதியாக - அதேநேரம் உறுதியாக எமது போராட்டம் தொடரும். இதுவரை காலமும் புலிகள அமைப்புடன் தான் ரணில் உட்பட ஏனைய அரசுத் தலைவர்கள் உடன்பாடு, இணக்கம் கண்டு வந்தனர். ஆனால், ஜனாதிபதி சந்திரிகாவோ அதிலும் விடக் கீழே இறங்கிவிட்டார்.

"காவல்துறை, நீதிமன்றம், நிர்வாகத்துறை எனப் பல கட்டமைப்புகளைப் புலிகள் வைத்துள்ளனர். அவற்றுள் கீழ் மட்டத்தில் உள்ள ஒன்றுடன் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசு, சர்வதேச மட்டத்தில் ஓர் அனுசரணையாளர் முன்னிலையில் ஒப்பமிட்டதன் மூலம் புலிகளின் அந்தக் கட்டமைப்பை அரசு முதல் தடவையாக ஏற்று அங்கீகரிக்கும் நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

"இந்தப் பொதுக்கட்டமைப்பில் 'உயர் சபை' என்று இருந்தாலும் பிராந்திய சபையே அதிக அதிகாரமுடையதாகும். அதன் தலைமையகம் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சியில அமைந்திருக்கும் என ஒப்பந்தத்தில் கூறப்படுகின்றது. உங்களுக்குத் தெரியும் கிளிநொச்சிக்குச் செல்வதானால் நீங்கள் புலிகளின் 'பாஸ்' அனுமதி பெறவேண்டும்.

"ஆகவே, வடக்கு - கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற சிங்களவர்களும், முஸ்லிம்களும் இனிமேல் தங்கள் வீடுகளைக் கட்டப் புலிகளின் 'பாஸ்' பெற்று கிளிநொச்சிக்குப் போய அங்குதான் கையேந்த வேண்டிய இக்கட்டு ஏற்பட்டிருக்கின்றது.

"இப்போது எந்தத் தேர்தல் வந்தாலும் அதை எதிர்கொள்ளத் தயாரான நிலையில் - முழு உஷாருடன்தான் - ஜே.வி.பி. உள்ளது.

"ரணில் - பிரபா ஒப்பந்தம் போல, இப்போது சந்திகா - பிரபா ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. இது கிழித்துப் போடப்படும்வரை எமது போராட்டம் ஓயாது" - இப்படி அவர்கள் தெரிவித்தனர். (க)

## வீரச்சாவடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படை வீரர் கோணலிங்கம் (கணபதிப்பிள்ளை கேணலிங்கம், 2 ஆம் வட்டாரம் ஆலங்கேணி) என்னும் போராளியும் -

02.09.2001 அன்று திருமலை கடற்பரப்பில் நடைபெற்ற இராணுவத்தின் தாக்குதலின் போது தமிழ்த் தேசிய துணைப்படை வீரரான காளிகரன் (சிவபாலன் காளிகரன் (குமரன்), 10 ஆம் குறிச்சி விவேகானந்தா நகர், திருமலை) என்னும் போராளியும் -

07.03.1992 அன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் தமிழ்த் தேசிய துணைப்படை வீரர் சவுந்தர்றாஜன் (காளியப்பு சவுந்தர்றாஜன் (தயா), பாரதிபுரம் கிளிவெட்டி) என்னும் போராளியும் -

18.04.2003 அன்று நடைபெற்ற தமிழ் முஸ்லிம் கலவரத்தின்போது ஏற்பட்ட தாக்குதலுக்கு இலக்காகி தமிழ்த்தேசிய துணைப் படை வீரர் ரவிச்சந்திரன் (மகேந்திரன் - ரவிச் சந்திரன் (ஊசி நாதன்), சம்பூர்) என்னும் போராளியும் வீரச்சாவடைந்துள்ளதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.(எ-203)


NEW SCIENCE CENTRE
JAFFNA, NELLIADY, POINT PEDRO
DAY CLASS
PHYSICS
ஆரம்பம்: 01.07.2005
By: பிரபா (37006)(38-13-12)

College of Computer Studies
புதிய பிரிவுகள் ஆரம்பம்
அனைத்து கணனிக் கற்கை நெறிகளுக்கும்
Special Offer 80%
Batch I : 29.06.2005
Batch II : 01.07.2005
Batch III : 03.07.2005
Time : 10 a.m & 03 p.m
தொடர்புகளுக்கு:- 119,Pointpedro Road, Nallur,Jaffna. 0777-279034

PC REPAIRS
திருத்தங்கள்
PC stuck
LCD Problems
Virus Problems
Display problems
Memory errors
Software/Drivers installation
Windows problems
Power supply/Pack Problems
Capture Card problems
Internet & Email Setup
Net-2-Phone configuration
Printers, Scanners & other
MICRO PC SYSTEMS
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039636

தொழிற்பயிற்சி நெறிகள்
வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவாறு 100% தொழில்சார் தொழிற்பயிற்சி அளிக்கப்படும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
* RADIO, T.V AND VIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ,ரி.வீ,டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, Ups, Printer, Scanner, என்பன திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)
* MOTOR REWINDING AND ELECTRICAL WIRING
சகல இன, (f) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)
* AIR CONDITIONING AND REFRIGERATION
சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)
* MOTOR CYCLE MECHANISAM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 06 மாதங்கள்)
* AUTO WIRING (காலம் 03 மாதங்கள்)
ஆரம்பம்:-27.06.2005, 03.07.2005
மேலதிக விவரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.
T.P:- 021-222 3335, 077 3151200


## மரண அறிவித்தல்

### திருமதி இராஜலட்சுமி செகநாதபிள்ளை

உடுப்பிட்டி சந்தை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலட்சுமி செகநாதபிள்ளை அவர்கள் நேற்று (26.06.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செகநாதபிள்ளை (D.O.A. Irrigation Dept.) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, நாகரத்தினம் (Head Guard, Railway), நாகேந்திரம் (Station Master, Railway), ஆனந்தராசா (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2005) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வல்லை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*'சிவனடி வாசா'*
*சந்தை வீதி, உடுப்பிட்டி.*
*T.P.:- 0602 212640.*

தகவல்:
மருமக்கள்.
(சி-43685)(38-13-12)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.